25வது வெற்றிகரமான ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம் VLAMBARAM
Tel:(416) 282-8059 Fax:(416) 282-4978
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com / www.tamilvanakkam.com

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

கனேடிய இலங்கை இந்திய சர்வதேச விளையாட்டு செய்திகள்
உடனுக்குடன் செய்திகளை பார்வையிட
தமிழ்வணக்கம்.கொம்
24/7 NEWS
www.tamilvanakkam.com

நதி 25 பாலம் 03 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 01, 2015

# கனடாவின் இரு வேறு பொருளாதாரம்

கனடாவின் பொருளாதாரம் அடிப்படையில் இரு பெரிய துறைகளை சார்ந்தது. இவ்வளவு காலமும் மும்முரமாக வளர்ந்து வந்ததுறை தற்போது ஒரு இடைவேளை (Taking a break) எடுப்பதாகவும் மற்றையதுறை மும்முரமாகவும் (Growing pretty well) மிகவும் பிரகாசத்துடன் வளரத் தொடங்குகிறது எனவும் கனேடிய வங்கியின் ஆளுனர் Stephen Poloz குளோப் அன்ட் மெயில் பத்திரிகைக்கு கனேடிய வங்கியின் கடன் வழங்கும் வட்டி வீதத்தை 1% இல் இருந்து 0.75% ஆக குறைத்தபோது தெரிவித்தார்.



இங்கு ஸ்ரீபன் குறிப்பிட்ட இரண்டு துறைகளும் சக்தி வளத்துறை (Energy Sector) மற்றும் உற்பத்தி துறை (Manufacturing Sector) யும் ஆகும். ஸ்ரீபன் மேலும் தெரிவிக்கையில் கனடாவின் இரு வேக பொருளாதாரம் (Two Speed Economy) தான் செல்லும் வேகத்தை தற்போது தலைகீழாக மாற்றுகின்றன என்றார்.

இதுவரை காலமும் அதி வேகத்தில் (Booming) வளர்த்து வந்த சக்தி வளத்துறை மசகு எண்ணை விலை வீழ்ச்சியால் வளர்ச்சி குறைந்து தற்போது ஒரு இடைவேளை எடுத்துக் கொண்டு இருக்கின்றது. இதுவரைகாலமும் மந்தகதியில் இருந்து வந்த வாகனம் மற்றும் இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் துறை தற்போது திடீர் என வளரத் தொடங்கியுள்ளது.

சில பொருளாதார வல்லுனர்கள் கனேடிய வங்கி உற்பத்தித்துறையை ஊக்குவிக்கவே கடன் வழங்கும் வட்டிவீதத்தை குறைத்தது என குற்றம் சாட்டினர். இதை மறுதலித்து பேசிய கனேடிய வங்கியின் ஆளுனர், உலகின் பொருளாதாரம் விரைவில் மாறுகிறது. அதற்கு ஏற்ப கனடாவை தயார் செய்யவே தாங்கள் கடன் வழங்கும் வட்டி வீதத்தை குறைத்ததாகவும் தேவை ஏற்படின் தாங்கள் மேலும் குறைக்க தயங்கமாட்டோம் என்று கூறினர். இவ்வாறு கடன் வழங்கும் வட்டிவீதத்தை குறைப்பது மசகு எண்ணை விலைக்குறைவால் ஏற்படப் போகும் பாதகமான விளைவுகளை தடுப்பதற்கான ‘காப்புறுதி’யாகும். கனேடிய வங்கி மிக நீண்டகாலமாக கடன் வழங்கும் வட்டிவீதத்தில் மாற்றம் செய்யாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. அதைவிட பொருளாதார வளர்ச்சி அடைந்த ஏழு (Group Seven) நாடுகளில் கனடா தான் முதலில் கடன் வழங்கும் வட்டி வீதத்தை குறைத்தது.

வட்டி வீதம் குறைந்தால் பணம் வைத்திருப்பவர்கள் அவற்றை வங்கிகளில் சேமிப்பு ஆக வைத்திருக்கமாட்டார்கள். அவர்கள் அதை எடுத்து உற்பத்தி நிறுவனம் போல் வேறு பல முதலீடுகள் செய்வார்கள். இதனால் பொருளாதாரம் வளரும்.

கனேடிய வங்கி தனது கடன் வழங்கும் வட்டி வீதத்தை குறைத்ததை தொடர்ந்து கனடாவின் பிரதான வங்கிகளும் தமது அடமான வட்டிவீதத்தை குறைத்துள்ளன. றோயல் வங்கி தனது அடமான ஐந்து வருட மாறாத (நிலையான) வட்டி வீதத்தை 2.84% ஆகவும் அடமான பத்து வருட நிலையான வட்டி வீதத்தை 3.84% ஆகவும் குறைத்துள்ளது. ரொறொன்ரோ டொமினியன் வங்கி தனது அடமான ஐந்து வருட நிலையான வட்டிவீதத்தை 3.09% ஆக குறைத்துள்ளது. இதேபோல் ஸ்கோசியா வங்கி மற்றும் தேசிய வங்கி ஆகியனவும் தமது அடமான வட்டிவீதத்தை குறைத்துள்ளன.

இதுவரை கனடாவின் பிரதான வங்கிகள் தங்களது கடன் வழங்கும் பிரதான வட்டி வீதத்தை (Prime Rate) 2.85% ஆக குறைத்துள்ளது. ஆனால் அதையும்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

Mortgage Alliance The Guardian
SAVE YOUR MONEY SAVE YOUR HOME
- 2nd Mortgage - Purchase & Refinance
- Renewal & Switch - Home Equity Loan
- Residential & Commercial Mortgage
We're Hiring Experienced & New Agents
Gini Annarasa
Cell: 416.830.3241
Franchise Of The Mortgage Alliance Network
*Independently Owned & Operated

# HOUSE FOR SALE



## MARKHAM & ELLESMERE

**3 Bedroom house for sale.**
**2 Bedroom basement with sep.entrance.**
**2 Washrooms. Fully Upgrade.**



**Lourdson Antonipillai**
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
205 - 7 Eastvale Dr.
Markham. ON L3S 4N8
Bus: 905.201.9977
Fax: 905.201.9229

**Contact: 416.738.8824**

* Independently Owned & Operated

Allstate. You're in good hands.

# Allstate Insurance Company Of Canada

## Home & Auto Insurance

## வீடு, வாகன காப்புறுதி





**Suren Navaratnarajah**
(Agent)
**Cell: 416.520.6916**
E-mail: snavaratnarajah@allstate.ca


# விளம்பரம் பத்திரிகையின் 25வது ஆண்டை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகள்

## குறுநாவல் போட்டி

முதல் பரிசு

Nirru நிரு
415-750-1976

வழங்கும் $1000

இரண்டாம் பரிசு

HomeLife/GTA Realty Inc Brokerage*
416.321.6969
6215 Finch Avenue East #203, Toronto, ON M1S OC2
*Independently Owned and Operated

வழங்கும் $ 500

மூன்றாம் பரிசு



Siva Panchalingam
(Insurance Broker)
416.990.4908

வழங்கும் $ 300

## கவிதைப் போட்டி

முதல் பரிசு



Thavam
Yogas Super Market
416.267.0408

வழங்கும் $500

இரண்டாம் பரிசு



Seelan Aiyadurai
(Real Estate Broker)
416.451.0271

வழங்கும் $300

மூன்றாம் பரிசு



Vijay Balan.S
A1 Ink Rainbow Inc
416.286.0333

வழங்கும் $200

## கட்டுரைப் போட்டி

முதல் பரிசு



Das Murugadas
(Mortgage Broker)
416.543.6614

வழங்கும் $500

இரண்டாம் பரிசு



Ramanan.S
(Realtor)
416.290.6000

வழங்கும் $300

மூன்றாம் பரிசு



Kathir Subramaniyam
Gnanams Studio
416.750.8118

வழங்கும் $200

## திரைக்கதைப் போட்டி

முதல் பரிசு



Raj Rasaratnam
(Realtor)
416.726.8055

வழங்கும் $500

இரண்டாம் பரிசு


MS7
QUALITY PRE-OWNED AUTO SALES



All kinds of Quality Pre-Owned Vehicles for Best Price Guaranteed.
Tel: 416-399-6640

வழங்கும் $300

மூன்றாம் பரிசு



N.Thayabharan
Building Experts Canada
416 332 1743

வழங்கும் $200


# மக்களின் எதிர்பார்ப்பு குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டு என்பதே!

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் முடிந்து, புதிய அரசு ஆட்சியமைத்துள்ளதன் பின்னர், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இந்த அரசு மக்கள் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 100 நாள் வேலைத்திட்டமே முக்கியமானதாக வெளிப்படுத்தப்பட்டது. அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இப்போது அரசு இறங்கியுள்ள போதிலும், குறிப்பிட்ட 100 நாட்களில் அவற்றை முழுமை படுத்துவது மிகவும் சிரமமானது என்பதை அரசாங்கம் தற்போது நடைமுறையில் புரிந்து கொண்டுள்ளதாகவே தெரிகின்றது. உண்மையில் 100 நாட்களில் அவற்றை செய்து முடிப்பதென்பது மிகவும் சவா லான விடயம்தான்.

ஆனால், இன்று இலங்கை மக்கள் மிக முக்கியமாக அவதானித்துக் கொண்டிருக்கும், எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விடயம் வேறொன்றாகியுள்ளது. புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற நாள் தொடக்கம் முன்னைய அரசாங்கத்தின் ஊழல், சதித்திட்டம் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் அடுத்தடுத்து வெளிவந்த வண்ணமுள்ளன. இதற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்களா? தண்டிக்கப்படுவார்களா? அல்லது தப்பிவிடப்போகின்றார்களா? என்கின்ற கேள்விகள் மக்களை குடைந்தெடுத்துக் கொண்டிருக்கின்றன. போர் நடைபெற்ற காலங்களில் இலங்கையில் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு குறிப்பாக, அவர்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை முன்னைய அரசாங்கங்கள் பிற்போட்டிருந்தன. போருக்கே முதலிடம் போரை முடித்த பின்னர் மக்கள் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை என கூறப்பட்டது. இலஞ்ச ஊழல் மோசடிகள் எல்லாம் போருக்குள்ளேயே புதைத்து மறைக்கப்பட்டன.

பின்னர், போரை முடித்த மஹிந்த அரசாங்கம் மக்களுக்கான பணிகளை எவ்வளவோ செய்திருக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால், அவர் தனது குடும்ப நலனை பேணுகின்ற அரசியலையே செய்தார். அது பற்றிய ஆச்சரியமான தகவல்கள் எல்லாம் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆசியாவின் அதிசயமாக இலங்கையை மாற்றிக் காட்டுவதாக கூறியவரின் குடும்ப அரசியலின் இரகசி யங்கள் இப்போது நாளந்தம் ஊடகங்களில் வெளிவந்து அதிசயிக்க வைக்கின்றன. தேர்தலுக்கு அடுத்த நாள் இராணுவச் சதியொன்றின் மூலம் தனது ஆட்சியை தொடர்ந்து தக்கவைக்க மஹிந்த ராஜபக்ஸ அலரி மாளிகை யில் திட்டம் தீட்டியதாக வரும் தகவலும், அதனைத் தொடர்ந்து நாளாந்தம் வெளிப்படுத்தப்பட்டு வரும் ஊழல், முறைகேடுகள் குறித்த தகவல்களும் நாட்டு மக்களை திகைக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. தேர்தல் நடைபெறுவதற்கு சில நாட்களின் முன்னரே, மஹிந்த தோற்றால் ஒரு இராணுவக் கலவரம் தோன்றலாம் என்கின்ற தகவல்கள் வெளிவந்து கொண்டிருந்தன. அதற்கான பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது. ஆனால், அதற்கு படைத்தரப்பிலுள்ள உயர் மட்டத்தினர் மறுத்து விட்டதால் அது நடைமுறைக்கு வரமுடியாமல் போய்விட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இந்த நிலையில், தேர்தலுக்கு அடுத்த நாளான 9ஆம் திகதி அதிகாலை 2:00 மணிக்கு மஹிந்தவின் நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் சிலர் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு சென்றவர்கள் தற்போது குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

'திவிநெகும' வங்கிக் கணக்கில் இருந்து 06.01.2015 அன்று பெருந்தொகைப் பணம் பெறப்பட்டுள்ளது. 'திவிநெகும' என்ற வாழ்வின் எழுச்சித் திட்டம் முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஸவின் கீழ் இயங்கி வந்தது. இப்போது, பசில் ராஜபக்ஸ அவரது மனைவியுடன் அமெரிக்காவிற்கு சென்றுவிட்டார். முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஸவின் வங்கிக் கணக்கொன்றில் 800 கோடி ரூபாய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அப்பணத்தை பின்னர் அவர் திறைசேரிக்கு அனுப்பி வைத்ததாகவும் புதிய நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கடந்த வாரம் கூறியிருந்தார். மஹிந்த ராஜபக்ஸ



**- விகிர்தன் -**

குடும்பத்தினர் மற்றும், அவரது நண்பர்கள் சீசெல்ஸ் நாட்டில் சொத்துக்களை வைத்திருப்பதாகவும் அது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. இவற்றைவிட, கடந்த கால கொலைகள், காணமல் போதல்கள், மனித கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஸ மீது பாரிய குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

மஹிந்த அரசாங்கத்தில் மக்கள் தொடர்பாடல் அமைச்சராகவும் அதேவேளையில் மஹிந்தவின் விசுவாசியாகவும் இருந்த மேர்வின் சில்வா நாட்டில் இடம்பெற்ற கொலை, கடத்தல்களுக்கு கோட்டாபயதான் காரணம் எனவும், கொள்ளைகளுக்கு பசில் ராஜபக்ஸ காரணமெனவும் கூறியுள்ளதோடு அதற்கான ஆதாரங்களுடன் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஸ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஸ ஆகியோருக்கு எதிராக குற்றவியல் விசாரணைகள் திணைக்களத்திடம் 17-01-2015 அன்று முறைப்பாட்டையும் தாக்கல் செய்துள்ளார். இலங்கையில் இடம்பெற்ற மிக முக்கியமான கொலைகள், வெள்ளை வான் கடத்தல்கள் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களுக்கு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஸவும், 'திவிநெகும' திட்டத்தில் 400 கோடி ரூபாவை சுருட்டியது, பாதுகாப்பு பெட்டகங்களை கொண்டு திறைசேரியை சுரண்டியமை உள்ளிட்ட பாரிய ஊழல் மோசடிகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸவுமே காரண கர்த்தாக்கள் என்று அவர் ஊடகங்களிடமும் வெளிப்படுத்தியுள்ளார். இவற்றுடன், நூற்றுக்கணக்கில் காணாமல் போயுள்ள அரச வாகனங்கள் தற்போது தேடப்பட்டும், சில கண்டுபிடிக்கப்பட்டும் வருகின்றன. ஒவ்வொரு நாளும் ஊடகங்களில் வெளியாகும் இவ்வாறான செய்திகளை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.


இலஞ்ச ஊழல் மோசடி தொடர்பில் ஜே.வி.பியினரே முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, பசில் ராஜபக்ஸ, கோட்டாபய ராஜபக்ஸ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக ஜே.வி.பி. இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளது. இக்குற்றசாட்டுக்கள் பற்றி ஆரம்பகட்ட விசாரணைகளை இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆரம்பித்துள்ள நிலையில், இதுவரையான விசாரணைகள் திருப்தியளிக்கும் வகையில் அமைந்திருக்கவில்லை என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது. தாம் முறைப்பாடு செய்தவர்களின் சொத்து விபரங்களைக் கூட ஆணைக்குழு இதுவரை கோரவில்லை. தாம் வழங்கும் தகவல்களைப் பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கி, விசாரணைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு ஆணைக்குழு முயற்சிக்கின்றதோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் ஜே.வி.பி தெரிவிக்கின்றது. இந்த நிலையில், இன்று பொதுமக்களும் இக்குற்றங்கள் குறித்த வெளிப்படையான உண்மைகளை எதிர்பார்க்கின்றனர். குற்றவாளிகள் தப்பிக்க முடியாதபடி நீதியின் முன் அவர்கள் நிறுத்தப்பட வேண்டும். அவர்கள் செய்த குற்றங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டு அதற்கான தண்டனைகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதுவே இன்று புதிய அரசாங்கத்திடம் மக்களுக்குள்ள முதல் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

கனேடியச் செய்திகள் ... இலங்கைச் செய்திகள்...
சர்வதேசச் செய்திகள்.... விளையாட்டுச் செய்திகள்...
சினிமா செய்திகள்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# ஒரு பெண்ணுக்கு எதற்கு ருத்ராக்ஷம்?



## சத்குரு வாசுதேவ்

தொட்டால் தீட்டு, நுழைந்தால் பாவம் என்று நாம் உருவாக்கி வைத்திருக்கும் சம்பிரதாயங்களும், நம் புரிதல்களும் தலைமுறை தலைமுறையாய் சிலவற்றை நம்மை நம்ப வைக்கத்தான் செய்கின்றன. இவற்றை சொன்னபடியே பின்பற்றுவது உசிதமா? புரிந்தவரிடம் கேட்டோம்…

கேள்வி: பல ஆன்மீகத் தலைவர்கள் பெண்கள் ருத்ராக்ஷம் அணிவதை தடை செய்கிறார்கள். ஆனால் இங்கு ஈஷாவில் பெண்களும் ருத்ராக்ஷம் அணிகிறார்களே?

பதில்: சத்குரு: இங்கு யாரும் அவர்கள் ருத்ராக்ஷம் அணிவதை கட்டுப்படுத்துவதில்லை. இங்கு எந்த தலைவர்களும் இல்லை. (சிரிக்கிறார்)

நம்முடைய வாழ்க்கையில் பிழைப்பு மட்டுமே முக்கியமான அம்சமாக இருந்தால், பிறகு அந்த சூழ்நிலையை இயல்பாகவே ஒரு ஆண்தான் கட்டுப்படுத்துவான் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். வெளிப்புறச் சூழ்நிலைகளும், சமூக சூழ்நிலைகளும் சரியான முறையில் இல்லாமல், எப்போதும் உயிர் ஆபத்தும், பூசல்களும் இருந்து கொண்டே இருந்தால், அங்கு ஆணினுடைய ஆதிக்கம்தான் இருக்கும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

ஏனென்றால் இதுபோன்ற சூழ்நிலைகளை அவனால் சிறப்பாகக் கையாள முடியும். ஆனால் சமூகங்கள் வளர்ச்சியடைந்த பிறகு, பிழைப்பு, உயிர்வாழ்தல் என்பது ஒரு பெரிய பிரச்சனையாக இல்லாதபோது, வாழ்வின் மென்மையான அம்சங்களின் பக்கம் நம் கவனம் திரும்பும். அப்போது ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே எந்தவிதமான வித்தியாசமும் இருக்காது.

ருத்ராக்ஷம் அணிவதை ஆன்மீகத் தலைவர்கள் தடை செய்வதாகச் சொன்னீர்கள். நீங்கள் ஆன்மீகத் தலைவர் என்ற வார்த்தையை நீக்கிவிட்டு, மதத் தலைவர்கள் என்றே சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஏனென்றால் ஆன்மீகப் பாதையில் இருக்கும் யாரும் இதைத் தடுப்பதில்லை. சில மதவாதக் குழுக்களில் இதை தடைசெய்கிறார்கள்.



மனிதர்களில் ஆண் வர்க்கம் முழு ஆதிக்கம் செலுத்தி, பெண்கள் அடிமைத் தளையில் மூழ்கி இருந்தபோது, சில வகையான கட்டுப்பாடுகள் உருவாக்கப் பட்டன. யார் ஆதிக்கம் செலுத்துகிறார்களோ, அவர்களது வசதிக்காகத்தான் சட்டங்கள் உருவாக்கப்படும், இல்லையா? துரதிருஷ்டவசமாக, இதுதான் மனித இனத்தின் வரலாறு முழுக்க நிகழ்ந்துள்ளது.

உலகத்தில் மிகச் சிலர்தான் அனைவரின் நல்வாழ்வையும், மற்ற அனைத்து உயிரினங்களின் நலனையும் பற்றி யோசித்திருக்கிறார்கள். ஒவ்வொரு உயிரையும் தன்னுயிராகக் கருதி, தங்களைச் சுற்றியிருக்கும் அனைவரது தேவைகளுக்கும் ஏற்ப சட்டதிட்டங்களை இயற்றியிருக்கிறார்கள். இவர்களைத் தவிர, பெரும்பாலான மனிதர்கள் எப்போதும் தங்களுடைய வசதிக்காகத்தான் சட்டங்களை இயற்றியிருக்கிறார்களே தவிர, பிறருக்காக அல்ல.

ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே அப்படியென்ன பெரிய பிரச்சனை? அவர்கள் இருவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக்கூட மறந்துவிட்டது ஒரு பெரிய பிரச்சனை. இன்னொரு பிரச்சனை, அவர்களுடைய புத்திசாலித்தனத்தை அவர்களது ஹார்மோன்கள் மூடி மறைத்து விட்டது.

அவர்களால் ஓர் உயிரை உயிராக மட்டும் பார்க்க முடிவதில்லை. ஆண்கள் எப்போதும் பெண்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிற அளவுக்கு ஹார்மோன்களால் ஆட்டுவிக்கப்படுகிறார்கள்.

அவர்கள் எப்போதும் பெண்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதால், வாழ்க்கையில் அவள் அவர்களை எதுவுமே செய்ய விடுவதில்லை. 'எப்போது பார்த்தாலும் என் தலைக்குள்ளேயே இருக்கிறாள். அவள் என்னை எதுவும் செய்ய விடமாட்டாள்' என்ற நிலை வந்துவிட்டது. அதனால் அவள் ஒரு மாயப் பிசாசு என்பது போன்ற ஒரு முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டனர்.


ஒருவருடைய புத்திசாலித்தனம், அவருடைய ஹார்மோன்களாலேயே மூடி மறைக்கப்பட்டு விட்டது என்பதை அவர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஆகவே அவள் தூய்மையற்றவள் என்று சொல்லத் துவங்கிவிட்டார்கள்.

பெண்ணின் தூய்மையின்மைக்கும், ருத்ராக்ஷம் அணியக்கூடாது என்பதற்கும் அவர்கள் சொல்லும் முக்கிய காரணம், பெண்களுக்கு மாதவிலக்கு சுழற்சி இருப்பதுதான். உங்கள் தாய் உங்களை கருவில் சுமந்து கொண்டிருந்தபோது, அவருக்கு மாதவிலக்கு ஏற்படவில்லை.

அப்படி என்றால் அதுதான் உங்களை உருவாக்கியுள்ளது. அதனால்தான் உங்கள் உடலும் உருவாகியுள்ளது. நீங்கள் உருவாகி இருக்கிறீர்கள். ஆகவே அவரும் அவரது மாதவிலக்குச் சுழற்சிகளும் அசுத்தமானவையாக இருந்தால், அதிலிருந்து உருவாகியுள்ள நாம் அனைவரும், இந்த மொத்த மனித இனமுமே அசுத்தமானது என்றுதான் சொல்லவேண்டும் (சிரிக்கிறார்).

அப்படிப் பார்த்தால், அசுத்தமானவராக இருக்கும் அனைவருமே தன்னை சுத்தப்படுத்திக் கொள்ள கண்டிப்பாக ருத்ராக்ஷம் அணியத்தான் வேண்டும்! இல்லையா?

**AABS DON VALLEY PEST CONTROL INC.**
**Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406**
ABDV PEST CONTROL
The Name You Can Trust



Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.



**யோகா சோதிடம்**
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க,
வீடு வாடகைக்கு விட அல்லது பெற்றுக்கொள்ள
மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

| BEST RATES FOR "AAA" CLIENTS | |
|---|---|
| 5 Yrs Variable : | 1.95% (P-0.90%) |
| 3 Yrs Fixed Rate : | 2.49% |
| 5 Yrs Fixed Rate : | 2.69 % |

*OAC

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00**




உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit
மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி
எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION

எமது முகவரி

**1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)**



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

And..

For All Your Real Estate Services

# தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்காவது முதலில் தீர்வு வேண்டும்!

## தாயகமடல்

ஆட்சி மாற்றத்தின் பின்னர் தென்னிலங்கையின் இனவாத கூச்சல்கள் சற்று அடங்கியுள்ளதாகவே இப்போது தோன்றுகின்றது. மஹிந்த அரசின் காலத்தில் தென்னிலங்கையிலுள்ள பௌத்த இனவாத, கடும்போக்கு கட்சிகள் அனைத்தும் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத கருத்துக்களை மோசமாக பரப்பி வந்தன. இவ்வாறான கட்சிகள் மஹிந்த அரசின் பங்காளிகளாகவும் இருந்தன. அக்கட்சிகளில் சில தற்போது மைத்திரியுடன் உள்ள போதிலும் மௌனத்தை கடைப்பிடிப்பதாகவே தெரிகின்றது.

நாட்டில் இனவாதத்திற்கு இடமில்லை என கூட்டங்களில் பேசி வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ குறித்த இனவாத கட்சிகளினதோ இனவாத அமைப்புக்களினதோ செயற்பாடுகளை கட்டுப்படுத்தவில்லை. அதுமட்டுமல்லாமல், தேவை எற்படும் வேளைகளில் எல்லாம் மஹிந்தவும் இனவாத்தை கையிலெடுத்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கான நலன்கள் குறித்து பேசும் போதெல்லாம் புலிகள் கேட்டதை தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் கேட்கின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அடிக்கடி கூறி வந்திருக்கின்றார். போரில் பெற்ற வெற்றியும், தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்கப் போவதில்லை என்கின்ற போக்கும் சிங்கள மக்கள் மத்தியில் தனக்கு அசைக்க முடியாத செல்வாக்கை தக்க வைக்க உதவும் என மஹிந்த அரசாங்கம் எண்ணியது. அது ஒருவகையில் சரியாகவும் நடைபெற்றது. நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் 50 வீதமான சிங்கள மக்களின் வாக்குகள் மஹிந்த ராஜபக்ஸவிற்கு கிடைத்துள்ளமை இதற்கு உதாரணமாகும். தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் அவருக்கெதிராக பயன்படுத்தப்படாமல் விடப்பட்டிருக்குமானால், மஹிந்தவே மீண்டும் வந்திருப்பார்.

மைத்தரிபால சிறிசேன தலைமையிலான பொது எதிரணி தேர்தலுக்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து மூச்சு விடவும் பயந்தது. இறுதிக்கட்ட வேளையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை மைத்திரி குழுவினர் சந்தித்தனர். கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பான செய்திகள் கூட அப்போது வெளிவரவில்லை. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்த விடயத்தை விடவும், அவர்களின் உடனடி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்துக் கூட மைத்திரி குழுவினர் ஒன்றும் பேசவில்லை என தெரிவிக்கப்பட்டது. சில கேள்விகள் கேட்டபோது மைத்திரி குழுவினர் பதில் சொல்லக்கூட தயங்கியதாக இச்சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் என்னிடம் தெரிவித்திருந்தார். தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி கதைத்தாலேயே மஹிந்த குழுவினர் அதனை சிங்கள மக்களிடம் மோசமான முறையில் வியாக்கியானப்படுத்தி தங்களுக்கு எதிரான பிரச்சாரத்தை செய்து



விடுவார்கள் என மைத்திரி தரப்பினர் கடுமையாக பயந்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை தங்களுக்கான ஆதரவை தெரிவிக்கும்படி அவர்கள் கேட்டுகொண்ட போதிலும், தங்களுக்காக கூட்டமைப்பினர் கடுமையாக பிரச்சாரம் செய்வதை அவர்கள் அப்போது விரும்பவில்லை.

இப்போது, மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றதும் தமிழ் மக்களுக்கு சாதகமான சில வியடங்கள் நடைபெற்றுள்ளன. மேலும் சிலவற்றை நடைமுறைப்படுத்தவதாக உறுதியும் வழங்கப்பட்டுள்ளது. வட மாகாணசபையின் செயற்பாடுகளுக்கு தடையாக இருந்த முக்கியமான முட்டுக்கட்டைகள் நீக்கப் பட்டுள்ளன. வட மாகாண ஆளுநராக இருந்த முன்னாள் இராணுவத்தளபதி ஜி.ஏ.சந்திரசிறி மாற்றப்பட்டு சிவில் அதிகாரியாக இருந்த பள்ளிஹக்கார ஆளுநராக நியமிக்கப் பட்டுள்ளார். வடமாகாண பிரதம செயலாளராக இருந்த சர்ச்சைக்குரிய விஜயலட்சுமி ரமேசும் வேறு துறைக்கு மாற்றப்பட்டிருக் கின்றார். வடமாகாண சபை முதலமைச்சர் ஆளுநரையும், செயலரையும் மாற்றுமாறு மஹிந்த அரசாங்கத்துடன் எவ்வளவோ எடுத்துரைத்தும் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வட மாகாணசபை தேர்தலை நடத்தியதையே தனது ஜனநாயக சாதனையாக மஹிந்த பறைசாற்றினார். அதிகாரங்கள் வழங்கப்படாத மாகாண சபையிலிருந்து மக்களுக்கு என்ன செய்வதென்ற விரக்தியை வடக்கு முதலமைச்சர் அடிக்கடி வெளிப்படுத்தியிருந்தார்.

முதற்கட்டமாக இப்போது வட மாகாண சபைக்கிருந்த இந்த சிக்கல்கள் நீக்கப்பட்டுள்ளன. வட மாகாண சபைக்குரிய முழுமையான அதிகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளும், சில இணக்கப்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. இவை உடனடியாக நடைமுறைக்கு வந்தாலேயே வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை தூக்கிநிறுத்தும் முதன்மையான பணியை மேற்கொள்ள முடியும். அடுத்ததாக, நீண்ட காலமாக சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இவ்வருட இறுதிக்குள் அவர்களை விடுதலை செய்யும் நடவடிக்கையை தாம் மேற்கொள்வதாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பிடம் ஜனாதிபதி மைத்திரி உறுதி கூறியுள்ளார். 100 நாள் வேலைத்திட்டத்திற்குள் குறித்த கைதிகளின் விடுதலையினையும் மேற் கொள்ள வேண்டும் என்று ஆயர் கேட்டுக் கொண்டதற்கு அவர் இவ்வருட இறுதியில் அதனை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகார முறைமையை மாற்றியமைக்கப் போவதாக வாக்குறுதி வழங்கியுள்ள நிலையில், அந்த அதிகாரம் இருக்கும் கால கட்டத்திலேயே கைதிகளை விடுதலை செய்ய முடியும். முன்னர் ஜே.வி.பி உறுப்பினர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டதைப் போல் தமிழ் அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பின் மூலம் விடுதலை செய்யலாம். இது தொடர்பில் தமிழர் தரப்பு மேலும் அழுத்தங்களை புதிய அரசிற்கு வழங்க வேண்டும். நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் 500 வரையிலான தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர். பெண்களும் இதில் அடங்குகின்றனர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் அடிப்படையில், பொலிஸ், பயங்கரவாத தடுப்புப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு மற்றும் படைத்தரப்பு முகாம்கள் ஆகியவற்றில் சந்தேகத்தின் காரணமாக தடுத்து வைக்கப் பட்டுள்ள கைதிகளின் பெயர் விபரங்களை திரட்டும் வேலைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், தேசிய நிறைவேற்று சபையில் கோரிக்கை விடுத்ததற்கு இணங்க, இலங்கைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தடுப்புக் காவல் கைதிகளின் விபரங்கள் சபையில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. இதையடுத்து பயங்கரவாத தடைசட்டத்தின் அடிப்படையில், பொலிஸ் பயங்கரவாத தடுப்பு பிரிவு, புலனாய்வு பிரிவு மற்றும் படைத்தரப்பு முகாம்கள் ஆகியவற்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தடுப்பு காவல் கைதிகளின் விவரங்களையும் தரும்படி மனோ கணேசன் கோரினார். இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த தகவல்களையும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சுகளிடமிருந்து பெற்று சபைக்கு சமர்பிக்கும்படி, தேசிய நிறைவேற்று சபையின் செயலாளர் திலக் ரணவிராஜாவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். தமிழ் மக்களுக்குள்ள உடனடி பிரச்சினைகளுள் காணாமல் போனவர்களின் பிரச்சினையும் ஒன்றாகும். இன்று மஹிந்த அரசாங்கம் மாறியுள்ள நிலையில் அவர்களால் மறைத்து வைக்கப்பட்ட பல்வேறு சொத்துக்கள், பொருட்களை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. அதைப்போல போர்க் காலங்களில் காணாமல் போனவர்கள், இறுதிப்போரில் படையினரிடம் சரணடைந்து பின்னர் காணாமல் போனவர்கள் குறித்தும் ஒரு தேடுதல் நடவடிக்கையை அரசாங்கம் தீவிரப்படுத்த வேண்டும்.

புதிய அரசாங்கத்திற்கு எதிர்பாராத விதமான வாய்ப்புக்கள் இப்போது கிட்டியுள்ளன. ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்றாலும், மஹிந்த தரப்பினர் மூன்று மாதங்களில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்லில் மீண்டும் இனவாதத்தை தூக்கிப் பிடித்துக்கொண்டு போட்டிக்கு வந்து விடுவார்களோ என்கின்ற அச்சமெல்லாம் இப்போது நீங்கி வருகின்றது. அவர்கள் தங்கள் மீதான ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களுக்கே முகம் கொடுக்க முடியாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. இனவாதத்தின் ஊக்கிகள் இன்று செயலிழந்து போயுள்ள சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்காவது முதலில் தீர்வு காணும் செயற்பாடுகளை முன்னெடுக்க எந்த தடைகளும் புதிய அரசாங்கத்திற்கு இப்போது இல்லை என்றே கூற வேண்டும்.

**- ஆதித்தன் -**


விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.



Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com



விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# கனடிய வங்கி வட்டிவீதம் இறங்கியது!

கனடிய பொருளாதாரத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் இறங்குமுகமான மாற்றம் மத்தியவங்கியின் ஆளுனர் திரு. ஸ்ரீபன் போல்ஸ் இன் வட்டிவீதக் கொள்கை யில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக ஒவ்வொரு வருடமும் எட்டு தடவை மத்தியவங்கி ஆளுனரும் அவருடைய பொருளாதார ஆலோசகர் களும் ஒன்று கூடி, பொருளாதாரம் சம்பந்தமான முடிவுகளை எடுப்பது வழமை. அதன் அங்கமாக இவ்வருடத்தின் முதல் சந்திப்பு, ஒட்டாவாவில் புதன்கிழமை ஜனவரி 21, 2015 நடைபெற்றது. கனடிய பொருளாதாரத்தை நிலை நிறுத்துவதற்காக, வட்டிவீதத்தை குறைப்பதாக முடிவு எடுக்கப்பட்டது. கடந்த சில வருடங்களாக வட்டிவீதத்தில் அதிகரிப்பு ஏற்படலாம் என பலராலும் எதிர்பார்க்கப்பட்டு வந்தது. பல கட்டுரைகள் இப்பத்திரிகையில் வட்டிவீதம் பற்றி எழுதப்பட்டிருந்தது. ஆனால் எந்த ஒரு பொருளாதார எதிர்வு கூறுபவர்களாலும் எதிர்பார்க்காத நிகழ்வாக வட்டிவீதம் 0.25% இனால் குறைக்கப்பட்டுள்ளது. இது ஒரு எதிர்பாராத இறக்கம். இதற்கு முக்கிய காரணமாக எதிர்பார்ப்பது கனடிய பொருளாதாரம் இறுக்கமடைந்து வருவதே. கனடாவின் மேற்கு மாகாணங்கள், குறிப்பாக அல்பேட்டா, சஸ்கச்சுவான் போன்றவை எரிபொருளின் வருமானத்திலே அதிகமாகத் தங்கியுள்ளன. அண்மைக்காலமாக எரிபொருளின் விலையில் ஏற்பட்டுவரும் இறங்குநிலை, மேற்கு மாகாணங்களின் வருமானத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல நிறுவனங்கள் தமது தொழிலாளர்களை பதவிநீக்கம் செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றன. கல்ஹரி போன்ற நகரங்களில் எதிர்பாராதளவு ஆதனங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. இதனால் ஆதனத்தின் விலையிலும் இறக்கம் ஏற்படத் தொடங்கியுள்ளது. தொழிலை இழந்தவர் கள் தமது ஆதனங்களை விற்கத் தொடங்கியதே காரணம். இவர்கள் ஆதனத்தை விற்றபின் ஒன்ராறியோ போன்ற மாகாணங்களிற்கு இடம்பெயர வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இந்த வருடத்தில் கனடாவின் 10 மாகாணங்களில் 8 மாகாணங்களில் ஆதனத்தின் விலையில் மாற்றம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது குறைவு ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஒன்ராறியோ இதிலிருந்து தப்பிக்கும் என எதிர்பார்க்கலாம். ஒன்ராறி யோவின் பொருளாதாரம் பொருட்களின் உற்பத்திகளில் தங்கியிருக்கிறது.




கடந்த வருடம் மார்ச் 2014 இல் இருந்து கிழக்கு உக்கிரெய்ன் இல் தீவிரவாதிகளிற்கு ரஷ்யா உதவி செய்வதாக குற்றம் சாட்டும் ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் ரஷ்யாவிற்கு

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 432

எதிராக பொருளாதார நெருக்கடி கொடுப்பதற்காக எரிபொருளின் விலையைக் குறைக்கத் தொடங்கின. அதன் தொடர்ச்சி யாக எரிபொருளின் விலை இறங்கியே வருகின்றது. இதனால் ரஷ்யாவின் பொருளாதாரம் மிகவும் இக்கட்டான நிலையை அடைந்துள்ளது. ரஷ்யா தனது வட்டிவீதத்தை டிசம்பர் 16, 2014 அன்று 17% ஆக உயர்த்தியுள்ளது. வட்டிவீதத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தியிருந்தும் ரஷ்யாவின் பணம் (Currency - ரூபிள் Ruble) இறங்கிக் கொண்டே வருகின்றது. தனது பெறுமதியை இழந்து கொண்டே வருகின்றது. கடந்த வருடம் மட்டுமே 46% இனால் பெறுமதியை இழந்துள்ளது. இந்த பொருளாதார யுத்தம்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

## HOTEL / GAS STATION FOR SALE

- Brand name hotels for sale in GTA & Ontario. Great Opportunity to buy leading name. Hotel properties with a reasonable downpayment.
- Brand name gas stations. New & operative around GTA area. Minimum investment. 1 Million.

## BRAND NEW HOUSE FOR SALE



*Scarborough East. Double Garage. Double door. Finished basement with washroom, kitchen, Sep. entrance. Move in any time. Asking Only $889,000*

## BUILDING FOR SALE

*42,000 sq.ft. industrial building for sale in Scarborough. Four loading locks, lots of parking, drive through door, Asking $3.4 Million Lawrence & Meadowvale*

## DETACHED HOUSE FOR SALE

*Scarborough North 4 Level Back split. Finished basement. 2 Kitchen. Sep. entrance. Asking 599,000.*

* INDEPENDENTLY OWNED AND OPERATED

# 11 ஆவது உலக கோப்பையில் 11 புதுமைகள்!

# 2015 இல் அறிமுகம்!

விளையாட்டுத் தகவல்கள் 359

2011 ஆம் ஆண்டைவிட ஒருநாள் போட்டிகளில் இப்போது பல்வேறு மாற்றங்கள் வந்து விட்டன. வரும் 2015 இல் நடக்கவுள்ள 11 வது உலக கோப்பை தொடருக்காக, 11 மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. அவுஸ்திரேலியா, நியூசிலாந்து இல் 11வது உலக கோப்பை தொடர் வரும் பெப்ரவரி 14 முதல் மார்ச் 29 வரை நடக்கவுள்ளது. இதில் கடந்த 2011 இல் இருந்ததை விட பல மாற்றங்கள் கொண்டு

| Pool A | Pool B |
|---|---|
| England (1) | South Africa (2) |
| Australia (4) | India (3) |
| Sri Lanka (5) | Pakistan (6) |
| Bangladesh (8) | West Indies (7) |
| New Zealand (9) | Zimbabwe (10) |
| Afghanistan (12) | Ireland (11) |
| Scotland (13) | United Arab Emirates (14) |

வரப்படுகின்றன. இதன் விவரம்:

• பீல்டிங் கட்டுப்பாடு: கடந்த 2012 இல் ஒருநாள் போட்டிகளில் பீல்டிங் கட்டுப்பாடு வந்தது. 3 ஆக இருந்த 'பவர் பிளே', 2 ஆக மாற்றப்பட்டது. இதில் முதல் 10 ஓவர்களில் 2 பேர், 'பேட்டிங் பவர் பிளேயில்' (40 ஓவருக்குள்) 3 பேர் தான் உள்வட்டத்துக்கு வெளியே 'பீல்டிங்' செய்ய வேண்டும். தவிர, மற்ற நேரங்களில் 4 பேர் தான் உள் வட்டத்துக்கு வெளியே 'பீல்டிங்' செய்வர்.

• 2 புதிய பந்து : 2011 ஆம் ஆண்டு உலக கோப்பை தொடருக்குப் பின், 2 புதிய பந்தில் போலிங் செய்யும் முறை அறிமுகம் ஆனது. பழைய முறைப்படி 34 ஓவருக்குப் பின் பந்தின் தன்மை மாறிவிடும். இதில் இரு பந்துகளிலும் தலா 25 ஓவர்கள் தான் வீசப்பட்டு இருக்கும். இது, வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானது. அதேநேரம், 'ரிவர்ஸ் சுவிங்' செய்வது சற்று கடினம்.

• 'பார்ட் டைம்' ஆதிக்கம் குறைவு: உள்வட்டத்துக்குள் அதிக பீல்டர்கள் இருப்பதால், 'பார்ட் டைம்' போலர்களை வைத்து சமாளிக்க முடியாது. அணியில் 5 'ஸ்பெஷல்' போலர்கள் கட்டாயம் இடம் பெற வேண்டிய நிலை. இவர்கள் விக்கெட் வீழ்த்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

• விதிமீறலுக்கு தடை : சுழற்பந்து என்ற பெயரில், ஐ.சி.சி., நிர்ணயித்த அளவை விட (15 டிகிரி) அதிகமாக கையை வளைத்து போலிங் செய்த போலர்கள் மீது சமீப காலமாக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒருநாள் போட்டிகளின் 'நம்பர்–1' போலர் சயீத் அஜ்மல் (பாகிஸ்தான்) தடையில் உள்ளார். இலங்கையின் சேனநாயகே இப்போதுதான் மீண்டுள்ளார். இந்தியாவில் நடந்த சாம்பியன்ஸ் லீக் தொடரில் புகார் கூறப்பட்ட வெஸ்ட் இண்டீசின் சுனில் நரைன், இதன்பின் போட்டிகளில் பங்கேற்கவே இல்லை.

• 'சூப்பர் ஓவர்' இல்லை : 1999 இல் அரையிறுதி 'டை' ஆன போது, 'சூப்பர் சிக்ஸ்' சுற்றில் தென் ஆபிரிக்காவை வீழ்த்திய அவுஸ்திரேலியா பைனலுக்கு தகுதி பெற்றது. இதற்குப் பதில், 2007 இல் 'பவுல் அவுட்' முறை வந்தது. இதுவும் மாற்றப்பட்டு, 2011 உலக கோப்பை தொடரில், 'சூப்பர் ஓவர்' முறை வந்தது. தற்போது, இதுவும் ரத்தாவதால், பைனல் போன்ற 'நாக் அவுட்' போட்டி 'டை' ஆனால், கோப்பை பகிர்ந்து தரப்படும்.

• பரிசு அதிகம் : உலக கோப்பை தொடரின் மொத்த பரிசுத்தொகை 2011ஐ விட 25 சதவீதம் அதிகரிக்கப்பட்டு ரூ. 63 கோடியாக உயர்ந்தது. சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு மட்டும் ரூ. 24.6 கோடி கிடைக்கும்.

• அம்பயர் மறு பரிசீலனை ('டி.ஆர்.எஸ்.,') : கடந்த 2011ஐ போல, 'டி.ஆர்.எஸ்., இருந்தாலும், 'ஹொட் ஸ்பாட்', 'ஸ்னிக்கோ மீட்டர்' என, எந்த முறையை பயன்படுத்தி 'அவுட்' தரவுள்ளனர் எனத் துல்லியமாக தெரியவில்லை. அதேநேரம், 'எல்.பி.டபிள்யு.,' அவுட்டை அறிய, கடந்த 2011 இல் சர்ச்சை கிளப்பிய 'போல் டிராக்கிங்' முறை, இப்போது கிடையாது.

• வேகத்துக்கு சாதகம் : பீல்டிங் கட்டுப்பாடு, 2 புதிய பந்து காரணமாக, வேகத்துக்கு சாதகமான நியூசிலாந்து ஆடுகளங்களில் பந்து நன்கு 'சுவிங்' ஆகும். அவுஸ்திரேலியாவில் நல்ல வேகத்துடன் எகிறும். இதனால், இம்முறை வேகப்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்துவர் எனத் தெரிகிறது.

• இளமையின் வரவு : கடந்த 2011 இல் இருந்த சச்சின், சேவக், ஸ்மித், காலிஸ், முரளிதரன், பாண்டிங், பீட்டர்சன் போன்ற சீனியர்கள் கிடையாது. இதற்குப் பதில் கோஹ்லி, கோரி ஆண்டர்சன், பின்ச், மொயீன் அலி, மிட்சல் ஸ்டார்க் ஜொலிக்க காத்திருக்கின்றனர்.

• அதிகரிக்கும் 'ரன்ரேட்': கடந்த 2007 இல் சராசரி ரன்ரேட் 4.95, 2011இல் 5.03 என, இருந்தது. தற்போதைய புதிய விதிகள் காரணமாக 2014க்குப் பின் அவுஸ்திரேலியா (5.42), நியூசிலாந்து (5.64) மண்ணில் நடந்த ஒருநாள் போட்டிகளில் 'ரன்ரேட்' வேகமாக உயர்ந்தன. இது உலக கோப்பை தொடரில் இன்னும் அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




• மீண்டும் 14 அணிகள் : கடந்த 2011 உலக கோப்பை தொடருக்குப் (14 அணிகள்) பின், 2015, 2019 தொடர்களில் 10 அணிகள் மட்டும் பங்கேற்கும் என அறிவிக்கப்பட்டது. அயர்லாந்து போன்ற ஐ.சி.சி., உறுப்பு நாடுகளிடம் எதிர்ப்பை ஏற்படுத்த, அடுத்த 3 மாதங்களில் இது திரும்பப் பெறப்பட்டது. இதனால், மறுபடியும் 14 அணிகள் பங்கேற்கின்றன.

## 9 ஆண்டுகளுக்கு பிறகு தென் ஆபிரிக்காவை வீழ்த்தியது மேற்கிந்திய தீவுகள்.

தென் ஆப்ரிக்கா – மேற்கிந்திய தீவுகள் அணிகள் இடையிலான நான்காவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி போர்ட் எலிசபெத்தில் நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்கா 8 விக்கெட்டுக்கு 262 ஓட்டங்கள் எடுத்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் பெரிதும் சோபிக்காத நிலையில், டேவிட் மில்லர் அதிரடியாக துடுப்பெடுத்தாடி அணி யின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். அவர் 130 ஓட்டங்களை சேர்தார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணியின் தொடக்க வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். எனினும் சாமுவேல்ஸ் (68), டேரன் சேமி(51) அணி இலக்கை நோக்கி பயணிக்க உதவினர்.

அணியின் விக்கெட்டுகள் விரைவாக சரிந்த நிலையில் 8–வது வரிசையில் களம் புகுந்த ஆந்த்ரே ரஸ்செல் தனிநபராக போராடி தென் ஆபிரிக்காவுக்கு 'செக்' வைத்தார். அப்போட்டியில் பந்தில் சிக்சர் அடித்து மேற்கிந்திய தீவுக்கு ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியை தேடித்தந்த ரஸ்செல் 64 ஓட்டங்களுடன் களத்தில் நின்றார். இதன்படி மேற்கிந்திய தீவுகள் அணி 48.3 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 266 ஓட்டங்கள் எடுத்தது. ஒருநாள் கிரிக்கெட்டில் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக 9 ஆண்டுகளுக்கு பிறகு மேற்கிந்திய தீவுகள் அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும். கடைசியாக 2006 ஆம் ஆண்டு ஜெய்ப்பூரில் நடந்த ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியா சத்தில் தென் ஆபிரிக்காவை வீழ்த்தி இருந்தது. அதன்பிறகு அந்த அணிக்கு எதிராக தொடர்ந்து 15 ஆட்டங்களில் தோல்வியும், ஒன்றில் சமநிலையையும் சந்தித்து இருந்தது. வெற்றி பெற்றாலும் 5 போட்டி கொண்ட இந்த தொடரை தென் ஆபிரிக்கா 3–1 என்ற கணக்கில் ஏற்கனவே கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீரர்களின் வித்தியாசமான நம்பிக்கை

கிரிக்கெட் வீரர்கள் களத்தில் சிறப்பாக செயல்பட வித்தியாசமான சில லக்கி நம்பிக்கைகளை கொண்டுள்ளனர். மேலும் அதனால் தான் அந்த செயல்பாடு நடந்த தாகவும் நம்புவர். சச்சின் அடித்து ஆடும் போது இருக்கும் இடத்தைவிட்டு அசையாமல் இருக்க வேண்டும், எழுந்தால் விக்கெட் போய்விடுமோ என்ற நம்பிக்கையை நம்மில் பலர் கொண்டுள்ளது போல் வீரர்களும் சில நம்பிக்கைகளை கொண்டுள் ளனர். இலங்கையின் ரோஷன் மஹனமா, ஒவ்வொரு பந்தை சந்திக்கும் முன்பாகவும் மட்டையின் ஹேண்டில் முனையில் முத்தம் கொடுப்பது வழக்கம். அதேபோல் மலிங்கா பந்தை முத்தம் கொடுப்பார். இந்தியாவின் வெற்றி கரமான அணித்தலைவர்களில் ஒருவராக அறியப்படும் அசாருதீன் ஒவ்வொரு பந்தை சந்திக்கும் முன்பாகவும், மட்டையை சுழற்றிக் கொள்வார். விராட் கோஹ்லி மட்டையை சுழற்றுவது நம்மில் பலருக்கும் நினைவில் இருக்கும். டெல்லியில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்டில் ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகளை வீழ்த்தி கும்ப்ளே சாதனை படைத்தபோது நடந்த நிகழ்வு சிலருக்கு நினைவிருக்கலாம். ஒவ்வொரு ஓவரை கும்ப்ளே வீச வரும் முன்பாகவும், அவரின் தொப்பியை சச்சின் வாங்கி நடுவரிடம் கொடுப்பதை வழக்கமாக வைத்திருந்தார். இதனால்தான் விக்கெட்டுகள் விழுந்ததாக இரு ஜாம்பவான்களும் இதுவரை நம்பிக் கொண்டுள்ளனர். தென் ஆபிரிக்காவின் அதிரடி ஆட்டக்காரராக இருந்த நீல் மெக்கன்சி செய்வது கொஞ்சம் வித்தியாச மானது. அவர் களமிறங்க மைதானத்திற்குள் இறங்கும் முன்பாக, வீரர்களின் உடை மாற்றும் அறையில் உள்ள வெஸ்டர்ன் ரொய்லெட்டில் ஒருமுறை தண்ணீரை பீய்ச்சி அடித்துவிட்டு, அதன்மேல் சீட்டை மூடிவிட்டுத்தான் செல்வாராம். அந்த நேரத்தில் யாராவது ரொய்லெட்டுக்குள் இருந்தால் கூட அவர்களை வெளியே வரச் சொல்லிவிட்டு தனது வழக்கமான வேலையை செய்துவிட்டுதான் மைதானத்தில் கால்வைப்பாராம்.




எஸ். கணேஷ்

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university.

Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at Scarborough & Stouffville



Contact: 647.340.9490/ 416.732.2228



3+1 Bedrooms, 2 W Room
Bsmt Tenant Currently Pay $700/ M



4 Bedrooms, 3 W Room
Basement With A Potential For A Side Entrance...Move In Ready



3 Bedrooms, 3 W Room
Gorgeous En-Suite Washroom With Jacuzzi And Fireplace.



3+1 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement Seperate Entrance



4 Bedrooms, 3 W Room
Premium Pie Shaped Lot Located In A Growing Ajax Neighbourhood.



3 Bedrooms, 2 W Room
Hardwood Floors And Pot Lights. Bright Eat-In Kitchen



3 Bedrooms, 3 W Room
California Shutters Throughout. Fin Bsmt W/ Fireplace & Kitchenette.



4 Bedrooms, 3 W Room
Many Windows Allow Sunlight Through The Kitchen / Family Rm




4 Bedrooms, 3 W Room
Great Location With Access To Public TransitShopping, Hwy 401,Medical Offices & Hospital



4 Bedrooms, 3 W Room
Double Car Garage W/Interlock Drive.



3 Bedrooms, 3 W Room
Beautifully Designed Kitchen Is Equipped With Granite Countertops



3+1 Bedrooms, 4 W Room
Quiet Street, 9 Ft Cellining, Fireplace, Family Size Kitchen,



3 Bedrooms, 4 W Room
Finished Basement With Laminate Flooring, Full Kitchen,



3+2 Bedrooms, 4 W Room
F/ Basement(2010) With Rec Rm, 2 Bdrms & 3Pc Bath




4 Bedrooms, 3 W Room
Very Bright Home With Lots Of Windows.



4 Bedrooms, 4 W Room
One Of The Bedrooms Walkout To A Beautiful Balcony

KZG 647-200-5833



RE/MAX
Outstanding Agents.
Outstanding Results.

# Sell your home faster and more money

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agentYour home sold in 90 days or we buy it

# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

Starting **Calculus** G12

**ACD, AP, IB & TOP MATH**

**G10 &G11 (Limited)**

**With an experience of teaching math More than 21 Years**

INFO:416.666.5515

# கனடாவின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

வங்கிகள் விரைவில் குறைக்க வேண்டிய நிலை வரும் என நிதி நிர்வாகத்துறையை சேர்ந்த Drew Donaldson, குளோப் அன்ட் மெயில் பத்திரிகைக்கு தெரிவித்தார்.

மசகு எண்ணெயின் விலை கடந்த யூன் 2014 இல் பரல் ஒன்று $110 (US) ஆக இருந்தது. அது தற்போது பரல் ஒன்று $46 (US) ஆககுறைந்துள்ளது. கனடாவின் ஒரு டொலரின் பெறுமதி தற்போது அமெரிக்காவின் 79 சதத்திற்கு சமமாக இருக்கிறது. கனேடிய டொலரின் பெறுமதி கடந்த ஆறு வருடத்தில் மிகக் குறைந்த அமெரிக்க டொலரின் பெறுமதியில் தற்போது இருக்கிறது. இது இன்னும் ஐந்து சதம் வரையில் குறையலாம் என சில பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள்.



பல பொருளாதார நிபுணர்களின் கணிப்பின்படி கனேடியன் டொலரின் பெறுமதி அமெரிக்காவின் டொலரின் 80 சதத்திற்கு சமமாக இருப்பதே கனடாவிற்கு மிகவும் நல்லதும் மற்றும் சரியானதும் (Natural Value) ஆகும் என்கிறார்கள்.

இதேவேளை கனேடியன் டொலரின் பெறுமதி அமெரிக்க டொலரின் 79 சதத்திற்கு சரியாக இருப்பதால் யார் இலாபம் அடைகிறார்கள் யார் நட்டம் அடைகிறார்கள் என CTV ஊடகம் ஜனவரி 29, 2015 இல் தெரிவித்துள்ளதை பார்ப்போம்.

### இலாபம் அடைபவர்கள்

> வாகனம் வைத்திருப்பவர்கள்: வாகன எரிபொருளின் விலை மிகவும் குறைவாக இருப்பதால் வாகனம் வைத்திருப்பவர்கள் மிகவும் இலாபம் அடைகிறார்கள்.

> உல்லாச பிரயாணத்தில் தங்கியிருக்கும் நகரங்கள்: கனேடிய டொலரின் பெறுமதி குறைப்பால் உல்லாசப் பிரயாணிகளின் தொகை அதிகரிக்கிறது. உல்லாசப் பிரயாணத்துறையில் இருக்கும் Jody Robbins, CTV ஊடகத்திற்கு தெரிவிக்கையில் ஏற்கனவே கனடா வரும் அமெரிக்க மற்றும் வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளின் தொகை அதிகரிப்பை தாங்கள் காண்பதாக தெரிவித்தார். அதுவும் பெரும்பாலான அமெரிக்க உல்லாச பிரயாணிகள் வாகனத்திலேயே வருவதாகவும் தெரிவித்தார்.

> கனேடிய விமான நிலையங்கள்: இவ்வளவு காலமும் பெரும்பாலான கனேடியர்கள் அமெரிக்காவிற்கு வாகனத்தில் சென்று அங்குள்ள விமான நிலையங்களில் இருந்தே தமது விமான பயணத்தை மேற்கொண்டனர். கனேடிய டொலரின் பெறுமதி குறைவால் இவ்வாறு பிரயாணம் செய்வதை விட கனடாவில் உள்ள விமான நிலையங்களில் இருந்து நேரடியாக விமானப்பயணத்தை மேற்கொள்வது மலிவாக இருக்கிறது.

> உற்பத்திதுறை: கனடாவின் வாகனம் மற்றும் இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள் உற்பத்தி செய்பவர்கள் தங்களது ஏற்றுமதி அதிகரித்துள்ளதை காணுகிறார்கள்.

### நட்டம் அடைபவர்கள்

> எல்லை கடந்து பொருட்கள் வாங்குபவர்கள்: கடந்த சில வருடங்களாக அமெரிக்காவிற்கு சென்று பொருட்களை வாங்குதல் பெருகி வந்தது. கனேடிய டொலரின் விலை குறைப்பால் இது மிகவும் குறைந்துள்ளது. இதேபோல் இணையதளம் மூலம் அமெரிக்காவில் இருந்து பொருட்களை வேண்டியோரும் தற்போது கனேடிய டொலரின் பெறுமதி குறைவால் இதை குறைத்து விட்டனர்.

> அமெரிக்காவில் இருந்து காய்கறி மற்றும் மளிகை பொருட்களை இறக்குமதி செய்வோர்: கலிபோர்ணியாவில் ஏற்பட்ட வறட்சியாலும் கனேடிய டொலரின் பெறுமதியாலும் இறக்குமதி பொருட்களின் விலை உயர்வால் இவ் இறக்குமதிகளின் விலை கூடியுள்ளன. இது கனேடிய விளை பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு மிகவும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

> அமெரிக்காவிற்கு உல்லாச பிரயாணம் மேற்கொள்வோர்: பல பிரயாண முகவர்கள் கனேடிய டொலரின் பெறுமதி குறைப்பால் மேலதிக பணம் (Surcharge) அறவிடுகிறார் கள். இதனால் அமெரிக்காவிற்கு உல்லாசப்பிரயாணம் செய்வதற்கு மேலதிக பணம் செலவாகிறது.

> கனேடிய ஹொக்கி நிர்வாகம்: கனேடிய டொலரின் பெறுமதி குறைப்பால் கனேடிய ஹொக்கி நிர்வாகங்கள் தமது வருவாயை இழக்கின்றன. இதற்கு முன்னர் கனேடிய டொலர் மிகக்குறைந்த அமெரிக்க டொலரின் பெறுமதியில் இருந்தபோது (1990) இரண்டு கனேடிய ஹொக்கி நிர்வாகம் அமெரிக்காவிற்கு இடம் பெயர்ந்தது குறிப்பிடத்தக்கது.



*Toronto: The world's best city to live.*

# NEW PROJECT BY

TRIDEL
BUILT FOR LIFE

# AVANI - 2

## (KENNEDY & HWY 401)




**Price Starting From $214,900**

- ***One Parking including***

**HomeLife / GTA Realty Inc., Brokerage***

**5215 Finch Ave, E., #203 Toronto, ON**

**Tel: 416.321.6969**

HOMELIFE
HIGHER STANDARDS

**Independently Owned & Operated*

# அன்புடைமை - 11

திருமூலரின் திருமந்திரத்தின் முதலாம் தந்திரப் பகுதியில் அன்புடைமை என்று ஒரு அதிகாரம் உள்ளது. இதில் உள்ள முதலாவது பாடலுடன் இந்த இதழின் தொடர்கட்டுரையை ஆரம்பிப்போம்.

"அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவுஇலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே"

இந்தத் திருமந்திரத்தின் உரையை இப்பொழுது கவனிப்போம். அன்பாகிய திருவருளும் இன்பாகிய சிவனும் மணியும் ஒலியும்போல் ஒன்றே. அவற்றை இருவேறு பொருள்கள் என்று அறிவில்லாதவர்கள் கூறுவர். அன்பாகிய திருவருளே இன்பாகிய சிவனுக்குத் திருமேனியாகும். அதனால் அன்பே சிவம். இந்த உண்மையையும் அறிவில்லாதவர்கள் உணரமாட்டார்கள். அன்பே சிவம் என்ற உண்மையை அருளால் அனைவரும் அறிந்த பின்பு தாம் இடையறாது திருவடிக்கண் வைக்கும் அன்பாகிய வித்தே சிவமாய் விளைந்து இன்பாய்க் கனிந்து அவ்வன்புடையார்க்கு என்றும் பொன்றாப் பேரின்ப நுகர்வாகும். இவ்வுண்மை அன்பே சிவமாய் அமர்ந்திருந்தார் என்னும் இம்மறை மொழியான் உணரலாம் என்று விளக்கம் கூறப்படுகின்றது. இது முழுமையான ஆன்மீக விடயமாக இருந்தாலும்



அன்புடைமை என்ற விடயம் எவ்வளவு முக்கியமானது என்பதை இந்தத் திருமந்திரத்திலும் கண்டு கொள்ளலாம் என்பதற்காகவே இங்கு குறிப்பிடுகின்றேன். குறைந்த பட்சம் அன்பு இறைவனின் திருவருளாகக் கொள்ளப்படுமளவிற்கு முக்கியமானது என்பதை உணர்ந்து கொள்வோம்.

கடந்த இதழில் புன்னகை பற்றி உரையாடியிருந்தோம். இது பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். கடந்த இதழில் மூளையால் உண்மையான புன்னகையையும், போலியான புன்னகையையும் பிரித்து அறிய முடியாது என்று கருதப்படுகின்றது. இதனை மறுத்ததோடு, மூளையால் உண்மையான புன்னகையையும் போலியான புன்னகையையும் எவ்வாறு பிரித்து அறிகின்றது என்ற விபரத்தையும் ஆய்வாளர் கலா நிதி நியடெந்தல் குறிப்பிட்டுள்ளார். ஒருவர் புன்னகை செய்யும் பொழுது எமது மூளை உண்மையான புன்னகை அமைப்போடு ஒப்பீடு செய்து பார்த்து உறுதி செய்து கொள்கின்றதாம். அத்தோடு புன்னகை செய்யப்படும் நேரத்தையும், சூழ்நிலையையும் மூளை கருத்தில் எடுத்துக் கொள்கின்றதாம். அத்தோடு அதே புன்னகையை எம்மையும் மூளைக்குள் பாவனை செய்ய வைத்தும் உறுதியாக மூளை அறிந்து கொள்கின்றது. எனவே நாம் உண்மையான புன்னகையை செய்து கொள்ள வேண்டும். ஒரு குழந்தை சராசரியாக ஒரு நாளுக்கு 400 தடவைகள் புன்னகை செய்கின்றதாம். இதனால் குழந்தையும் மகிழ்ச்சியாக இருப்பதோடு சூழவுள்ளவர்களையும் மகிழ்ச்சிப்படுத்துகின்றது. மகிழ்ச்சியாக உள்ள வளர்ந்தவர்கள் சராசரியாக ஒரு நாளில் 40 முதல் 50 வரை புன்னகை செய்கின்றார்கள். ஏனையோர் ஒரு நாளுக்கு 20 தடவைகள் அல்லது குறைவாகவே புன்னகை செய்கின்றார்களாம். எவ்வாறு நல்ல தூக்கம் மன அழுத்தம் இன்றி வாழ்வதற்கு முக்கியமோ அவ்வளவிற்கு நாளொன்றில் அதிக எண்ணிக்கையான புன்னகை செய்தலும் உதவும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். புன்னகை செய்வதால் மனவழுத்தத்தைத் தூண்டும் ஹோமோன்களின் உற்பத்தி தடுக்கப்படுவதால் மனவழுத்தம் குறைகின்றது. உடல் ஆரோக்கியமும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது எனப் புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இத்துடன் புன்னகை செய்யும்பொழுது மகிழ்ச்சியை ஏற்படுத்த உதவும் இரசாயனப் பதார்த்தங்களும் உருவாக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு நாளும் காலையில் நாம் அதிகம் நேசிப்பவர்களையோ, அளவற்ற பக்தி கொள்ளும் தெய்வத்தையோ, எமக்கு பிடித்தமான விடயங்களையோ நினைத்தவாறு கண்ணாடிக்கு முன்னால் நின்று உங்கள் வாயின் இரண்டு முடிவுப் பகுதிகளையும், கண்ணைத் தாங்கும் முகத்தின் பகுதியையும் ஈடுபடுத்திப் புன்னகைப் பயிற்சி செய்துவர நல்ல பலன் கிடைக்கும் என்று சொல்லப்படுகின்றது. எமது புன்னகை உண்மையானதா என்பதை நாமே எமது உள்ளத்தில் தோன்றும் மகிழ்ச்சியையும் ஓய்வு நிலையையும் வைத்துக் கொண்டு அறிந்து கொள்ளலாம். ஆய்வாளர் லாபிரான்ஸ், பெண்கள் ஆண்களை விட அதிகம் புன்னகை செய்கின்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். "ஒரு புன்னகை எவ்வளவு நல்ல பலனைக் கொடுக்கும் என்பதை அறியாதவர்களாக நாம் உள்ளோம்" என்று அன்னை திரேசா




குறிப்பிட்டுள்ளார். அன்புடைமை என்ற சொத்தை முழுமையாகப் பயன்படுத்திய ஒருவராக அன்னை திரேசா விளங்கினார் என்பதில் ஐயமில்லை.

மனிதர்களில் காணப்படும் மகிழ்ச்சியின் நிலை பற்றிய ஆய்வுகள் கடந்த இருபதாண்டு காலத்தில் மிகவும் அதிகமாக இருக்கின்றன என்று ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒருவரில் உள்ள மகிழ்ச்சியின் நிலையை அறிந்து கொள்வதில் புன்னகை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. புன்னகை எமக்கு நல்ல தோற்றத்தையும் கொடுக்கின்றது. இதனால் தான் புகைப்படம் எடுக்கும் பொழுது புன்னகை செய்யுங்கள் என்று படப்பிடிப்பாளர்கள் கூறுகின்றார்கள். ஒருவருக்கொருவர் புன்னகையைப் பரிமாறல் செய்யும் பொழுது இருவர்களின் மூளைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு இருவருக்கும் நல்ல பலனைக் கொடுக்கின்றது. அவர்களின் சுகம், மகிழ்ச்சி, புரிந்துணர்வு எனப் பல்வேறு நன்மைகளை பெற்றுக்கொள்கின்றார்கள். சில நேரங்களில் மகிழ்ச்சிக்கான மூலம் புன்னகையாகவும், சில நேரங்களில் புன்னகைக்கான மூலம் மகிழ்ச்சியாகவும் இருக்கும். கோழியில் இருந்து முட்டை வந்ததா அல்லது முட்டையில் இருந்து கோழி வந்ததா என்ற புதிர் போன்று உள்ளத்தில் மகிழ்ச்சி இருந்தால் பிரகாசமான புன்னகை வந்ததா அல்லது பிரகாசமான புன்னகை வந்ததால் உள்ளத்தில் நல்ல மகிழ்ச்சி ஏற்பட்டதா என்று எண்ணக்கூடிய நிலையும் இருப்பதாகத் தோன்றுகின்றது. நாம் புன்னகை செய்யும் பொழுது எம்மைச் சூழவுள்ள உலகமும் எம்மைப் பார்த்து புன்னகை செய்கின்றது. எம்மைச் சூழவுள்ளவர்கள் எம்மைப் பார்த்துப் புன்னகை செய்யும் பொழுது எமக்கு அதிக பலன்கள் கிடைக்கின்றது. இந்தக் கட்டுரையை எழுதும் பொழுது புன்னகை பற்றி இவ்வளவு விடயம் உள்ளதா? என்ற வியப்பைத் தருகின்றது. புன்னகை என்பது அன்புடைமை என்ற விடயத்தில் முக்கியமானதே என்பதில் ஐயமில்லை.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்...



- அகணி -
authorakani@yahoo.com


## CEDARGREEN LAUNDRY (COIN LAUNDRY & DRY CLEAN DEPOT )

" VERY CLEAN LAUNDRY"

- Front Load Coin Wash From..$2.25
- We Clean Comforters
- Low Cost Dry Clean Depot Open 7 Days
- Laundry Folding Tables, Lots of Space
- Free WiFi
- Change Machines



தமிழ் வியாபார நிறுவனம்

OPEN DAILY 8 am – 11 pm, (Sat. & Sun. 7:00 Am – 11:00 pm)

Store Tel : 416.289.7514 / Owner Sam Cell: 416.732.9383

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7


# தொந்தி கரைய வயிற்றுப் பயிற்சி

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

உடல்பயிற்சி இல்லாததால் அநேகமாக எல்லா வியாதிகளும் வருகின்றன. உடற் பயிற்சி என்றால் ஏதோ பெரும் சிரமப்பட்டுச் செய்ய வேண்டியது என்று நினைத்து பயந்துவிட வேண்டாம். தினமும் நடப்பது கூட ஒருவகையில் தேகப்பயிற்சிதான்.

ஒருவருக்கு தொந்தி உண்டாக காரணம் என்ன? பருத்த வயிறு உடையவர்களுக்கு பலவிதமான நச்சுப் பொருள்களும், கழிவுப் பொருள்களும் பலவித நோய்க் கிருமிகளும் வயிற்றின் அடிப்பகுதி அதாவது அடி வயிற்றில் தங்கியிருக்கும். அங்கு சரியான ரத்த ஓட்டம் இருக்காது. திடீரென்று ஒரு நோய் வரும்போது இந்த நச்சுக் கிருமிகள் நோயின்தன்மையை தீவிரப்படுத்தி அதிகரிக்கச் செய்கிறது. இதற்கு நிவாரணம் வயிற்றுக்குத் தக்க பயிற்சி அளிக்க வேண்டும். மனிதர்கள் நோயின்றி வாழ பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு சக்தி வாய்ந்த யோகிகளினால் நமக்கு விட்டுச் சென்ற வழிமுறைதான் 'உட்டியானா' என்ற வயிற்றுப்பயிற்சி.

வயிற்றுப்பகுதி பலமனடைவதற்கு முக்கிய காரணம் மலச்சிக்கல் என்பதனை பெரும்பாலானோர் ஏற்றுக்கொள்வதில்லை. நேரம் தவறாது உணவு உண்ணுவதற்குரிய முக்கியத்துவத்தை அந்த உணவு செரிமான மடைந்து அதன் கழிவுகள் முழுமையாக வெளியேற்றப்படுவதற்கு முன்னுரிமை கொடுக்காது பலரும் தவறவிடுகின்றனர். நாளடைவில் உடல் கழிவுகள் சேர்ந்து அடிவயிற்றினை பருமனாக்குவதுடன் ஊனச் சதையையும் வளரச் செய்கின்றது.



இவ்வாறு பருத்த வயிற்றில் வாயுக்கோளாறு மிகுதியாகின்றது.

இப்போதெல்லாம் தொந்தியை கரைக்க உடற்பயிற்சி மையங்களுக்கு (GYM) செல்கின்றனர். உடல் மெலிதலுக்குரிய மருந்து மாத்திரைகளை உபயோகிக்கின்றனர். பட்டினி (Diet) கிடக்கின்றர். ஆனால் தொந்தி பெரிதாக கரைந்த பாடில்லை. மந்திரத்தால் செய்ய முடியாததை தந்திரத்தால் இலகுவாகச் செய்யலாம் என்பார்கள். கால்களை சற்று அகலமாக வைத்தபடி நிற்கவும் பின் முன்புறமாகக் குனிந்து கைகள் இரண்டையும் தொடைகளின் மீது சற்று அழுத்தமாக வைத்துக் கொள்ளவும். மூக்கின் வழியாக மூச்சுகாற்றை முழுமையாக வெளியே விடவேண்டும். பின் உள்இழுக்காது பத்து வினாடிகள் வரையில் வயிற்றினை எக்கின நிலையில் உள்இழுத்து வெளியில் தள்ள வேண்டும். பின் சற்று நிமிர்ந்து மூச்சினை உள்வாங்கவும் மறுபடியும் குனிந்து எக்கி எக்கி வயிற்றினை முடிந்தவரை உள்ளும் வெளியும் திரும்பத்திரும்ப இழுத்துவிட வேண்டும். இந்தப் பயிற்சி ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும் சில நாட்களில் இலகுவாகி விடும். இந்த உட்டியான பயிற்சியினால் தொந்தி இருந்த இடம் தெரியாது போய்விடும். இதனை ஒரு யோகா ஆசிரியரின் உதவியுடன் ஆரம்பத்தில் பயிற்சி செய்து வருவதுதான் சிறந்தது. இந்த இணையற்ற பயிற்சி முறையினால் ஒருவரின் தோற்றமும் மாற்றமடையும்.

எல்லாவிதமான வயிற்றுக்கோளாறுகளையும் நீக்கிக் கொள்ள ஒரு சுலபமான வயிற்றுப் பயிற்சி உண்டு. இந்த பயிற்சியை காலையில் வெறும் வயிற்றில் பழக வேண்டும். இருபது நிமிடத்திற்கு குறையாமல் செய்வது அதிக பலனைத் தரும். அதாவது மல்லாந்து படுத்துக் கொண்டு கால்கள் இரண்டையும் ஒன்று, ஒன்றரை அடி உயரமான நாற்காலியிலோ அல்லது சாய்ந்த பலகைமீதோ தூக்கி வைத்துக் கொள்ளவும். பின்பு வயிற்றினை எக்கியபடி உள்ளிழுத்து முதுகெலும்பைத் தொடும் அளவிற்கு பத்து வினாடிகள் இழுத்தபடி நிறுத்தி வைத்திருக்கவும். பின் மெதுவாகத் தளர்த்திவிட வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்யவும்.

இந்தப் பயிற்சி மூலநோயைக் குணப்படுத்தும், ஆஸ்துமா சுகமாகும், தொந்தி கரையும், மலச்சிக்கல் ஏற்படாது, குடலில் கிருமிகள் தங்காது, வயிற்றுப் புண்களைக் குணப்படுத்தும், அஜீரணம் நீங்கும், நன்றாகப் பசி எடுக்கும், குடலிறக்கம் குணமாகும், சிறுநீரகக் கல்லும் கரையும்.

வாழைத்தண்டு அடிக்கடி உண்டு வந்தால் தொந்தி கரையும், வெள்ளரிக்காய் சாப்பிட்டு வந்தால் வயிறு பருமலடையாது. வயிறு பெரிதாகி விட்டால் அதனை குறைப்பது இலகுவான காரியமல்ல. வயிற்றின் சுற்றளவு அதிகமாக அதிகமாக ஆயுள் சுருங்கும் என்பதை உணர்ந்து தொந்தி உருவாகாமல் பார்த்துக்கொள்வது



ஒவ்வொருவரினதும் மிகவும் முக்கியமான கடமையாகும்.

## உணவுக் கட்டுப்பாடு

உணவுப் பழக்க வழக்கங்களில் சில மாற்றங்களைக் கடைப்பிடிக்காது விட்டால் குறிப்பிடத்தக்க பலன் ஏதும் கிடைக்கப் போவதில்லை. மாப்பொருள் நிறைந்த உணவுகள் குறிப்பாக அரிசி, கோதுமை, கிழங்கு மற்றும் பருப்பு வகைகள் அதிகம் நிறைந்தவற்றை முடிந்த அளவில் தவிர்த்து கீரைகள், பச்சைக் காய்கறிகள் நார்ச்சத்து நிறைந்த பழவகைகள் போன்றவற்றை அதிகம் உணவாக உட்கொள்ளும் போது மலச்சிக்கல் வாயுத்தொல்லை அஜீரணக் கோளாறு என்பனவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதால் வயிற்றுப்பகுதி பருமல் அடையாதிருக்க வாய்ப்பு அதிகம்.

இவற்றைத் தவிர்த்து சில யோகாசன பயிற்சி முறைகள் தொந்தியைக் கரைக்க உதவுவதுடன் உடலை அழகாகவும் இளமையாகவும் வைத்திருக்க வழி செய்கின்றன.


MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# பிரதம நீதியரசராக கே. ஸ்ரீபவன் சத்தியபிராமணம்

புதிய பிரதம நீதியரசராக கே. ஸ்ரீபவன், ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன முன்னிலையில் 30 ஜனவரி 2015 இல் சத்தியப்பிரமாணம் செய்தார். இவர் சிரேஷ்ட சட்டத்தரணியாகவும் உயர்நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றங்களின் நீதியரசராகவும்



மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிரேஷ்ட ஆலோசகராகவும் பிரதி சட்டமா அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

கனகசபாபதி ஜே. ஸ்ரீபவன் 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்ப கல்வியை கற்ற அவர் சட்டக் கல்லூரியில் இணைந்து கொண்டதுடன் 1976 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியின் பரீட்சையில் முதல் தரத்தில் சித்தியடைந்தார்.

1978 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணிக்கு சேர்ந்த ஸ்ரீபவன், பதில் சட்ட ஆலோசகராக பணியாற்றினார். 1989 ஆம் ஆண்டு சிரேஷ்ட சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். புதிய சட்டக்கல்வியை தொடர்ந்தும் கற்று வந்த ஸ்ரீபவன், 1992 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழிற்சட்டம் சம்பந்தமான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் அதே ஆண்டில் லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டம் தொடர்பில் விசேட பட்டத்தையும் பெற்றுள்ளார். 1996 ஆம் ஆண்டு பிரதி சட்டமா அதிபராக நியமனம் பெற்ற அவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகவும் பணியாற்றியுள்ளார்.

2002 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்ட ஸ்ரீபவன் 2007 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவராக நியமிக்கப்பட்டார். உயர் நீதிமன்ற நீதியரசர் நிஹால் ஜயசிங்க ஓய்வுபெற்ற பின்னர் ஸ்ரீபவன் 2008 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

இலங்கையின் 45 வது பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் 30 ஜனவரி 2015 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்தார். இலங்கையின் மிக உயர்ந்த பதவிகளில் ஒன்றான பிரதம நீதியரசர் பதவியை அவர் தன்வசப்படுத்தி உள்ளார்.







# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி நாலாம் ஆண்டு, கோடை காலம், இங்கிலாந்தின் லிற்றில் லிவர் எனும் இடத்தில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவம். ஒருநாள் மாலைவேளையில் ஒரு செம்மஞ்சள் ஒளிர்வுள்ள கோளமொன்றானது ஒரு பெண்ணின் வீட்டின் முன்னால் சத்தமின்றி வெடித்திருக்கின்றது. அன்றிரவு பெயர் குறிப்பிடப்படாத அப்பெண்ணின் படுக்கை அறையினுள் ஏதோ ஒன்று வந்திருக்கின்றது. முகம் போன்று ஏதும் இல்லாத அந்த ஐந்தடி உயரமளவில் இருந்த அது, ரெலிப்பதி எனப்படும் பேச்சோ அல்லது சமிக்கைகளோ இல்லாது மனதினால் கருத்தறிவித்தல் எனும் முறையில் அப்பெண்ணிடம் “பயப்பட வேண்டாம்! நாங்கள் சிலர் தற்காலிகமாக இப்புவியில் தங்கியிருக்கின்றோம்” எனக் கூறிவிட்டுப் போய்விட்டது. பின்னர் வேறுஒரு நாளில் அதே படுக்கை அறையில் மூன்று அதேமாதிரியான உருவங்கள் வந்து அவளுக்கு நன்றி கூறிவிட்டு தாங்கள் பூமியை விட்டு விரைவில் புறப்படுகின்றோம் எனக் கூறியதாகக் கூறப்படுகின்றது.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இச்சம்பவமானது பிளைங் சோஸ் றிவியூ, ஆவெனஸ் போன்ற புத்தகங்களில் 1976ல் வெளிவந்தது என யூஎவ்ஓ & ஏலியன் கொன்ராக் என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள் ளது. இச்சம்பவம் மெய்யோ அல்லது பொய்யோ என்பதற்கு அப்பால் சில செய்திகளை எமக்குச் சொல்லுகின்றது. உயிரினங்கள் என்ற வகையில் பூமியில் உள்ளவை மாத்திரம்தான் என்றில்லை என்ற எண்ணத்தைத் தரக்கூடியதாக உள்ளது. அத்துடன் எம்மைவிட முன்னேற்றமான உயிரினங்களும் இப்பேரண்டத்தில் உள்ளன என்பதனைச் சிலர் ஏற்றுக் கொள்ளுகின்றார் கள் என்பதனைக் காட்டுகின்றதல்லவா. அத்துடன் அப்படியான உயிரினங்கள் புவியின் மனிதர்கள் போலவும் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை யும் காட்டுகின்றதல்லவா. இச்சம்பவமானது இனம் தெரியாத பறக்கும் பொருள்கள் உண்டு, வேற்றுக்கிரகவாசிகள் என்பவர்கள் இருக்கிறார்கள் என்றெல்லாம் கூறுபவர்களை உற்சாகப்படுத்தும் என்பதில் ஐயமில்லைத் தானே!



இனி உயிரினம் ஒன்றினை அறிந்து கொள்வதற்கான முக்கிய தன்மையைப் பார்ப்போம். உயிரினம் ஒன்று எவ்விதம் தகவல்களைச் சேமிக்கின்றது, பின் எவ்விதம் தகவல்கள் மூலம் சக்தியைப் பாவிக்கின்றது என்பதே உயிரினம் ஒன்றினை அறிந்து கொள்வதில் முக்கியமாகின்றது. பொதுவாக நாம் கருதும் உயிரினங்கள் பல சிறிய கலங்களினால் ஆனவை. இக்கலங்களை பொருட்களின் அணுக்களுக்கு பொதுமையில் ஒப்பிடலாம். பல அணுக்கள் சேர்ந்து ஒரு பொருளை ஆக்குவது போன்று, பல மில்லியன் மில்லியன் கலங்களினால் எங்களது உடல் ஆகியுள்ளது. அவ்விதமே தான் மரங்கள், செடிகள், பறவைகள், மிருகங்கள் போன்றவையும் பல கலங்களின் சேர்க்கையினால் ஆனவையாகும். அமீபா, பரமேசியம் போன்ற ஒரு கலத்தினால் ஆன உயிரினங்களும், இன்னும் இரு கலங்களினால் ஆன உயிரினங்களும் கூட உண்டு. உயிரினங்கள் கொண்டுள்ள இக்கலங்கள் சூழலில் இருந்து சக்தியைப் பெறுகின்றன. இச்சக்தியினைக் கொண்டு தம்மைத் தக்க வைத்துக்கொள்வதுடன் உயிரினத்தின் செயற்பாட்டிற்கான இலக்கு களையும் நிறைவேற்றுகின்றன. கலம் ஒன்றின் நடவடிக்கைளுக்கான ஒழுங்குகள் சமிக்கை வடிவங்களாக (Patterns) கலத்தினுள் பாதுகாப்பாக சேமித்து வைக்கப் பட்டு உள்ளன. இவ்வடிவங்களே கலமானது எவ்விதம் தொழிற்படவேண்டும் என்பதனை அந்தந்தக் கலங்களுக்கு விளக்குகின்றன. கலத்தினுள் பாதுகாப்பான இடத்தில் சேமிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் கலத்தின்


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca




தொடர்ச்சி 18ஆம் பக்கம்


MAHAJANAN CONTEST 2015

கணிதம், பொதுஅறிவு போட்டிகளிற்கு, தரம் 1 முதல் 12 வரையுள்ள மாணவர்கள் பங்குபற்றலாம். வெற்றி பெறுவோருக்கு தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களுடன்,

விஷேட பரிசில்களும் வழங்கப்படும்.

பதிவுக்கட்டணமாக, விண்ணப்பத்தாருக்கு 25 டாலர்களும், மூன்று அல்லது மூன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பத்தாரர்கள் உள்ள குடும்பம் ஒன்றிற்கு 60 டாலர்களும் அறவிடப்படும்.

பதிவுகளுக்கு: இணையத்தள இணைப்பு - http://contest.mahajanan.org

மேலதிக விபரங்களுக்கு, அழையுங்கள் : 416 451 8427, 647 989 6477, 647 547 7096

First Name ____________ Last Name ____________

Gender _____ Grade _____ Math _____ G. K _____

Email Address ____________ T. Phone ____________

Sunday, March 01, 2015 .9.00am

Sir John A. Macdonald Collegiate Institute, 2300 Pharmacy Ave, Scarborough, Ontario.



MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION – CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No: 001100556)

# ஆயுள் காப்புறுதி பணம் பெற உரித்துடையவர் யார்? நீதிமன்றத்தின் முடிவு!

## கனடிய தகவல் தொடர் 226

*Life insurance policy beneficiary vs will beneficiary who is boss*

'மரண சாசன பத்திரம்' (last will) என்பது சகலரும் எடுத்து வைத்திருக்க வேண்டிய ஒரு இன்றியமையாத உடன்படிக்கை என்பது பலரும் அறிந்த ஒரு விடயமாகும்.

அதாவது ஒருவர் தனது மரணத்தின் பின்பு தனது பணம், சொத்துகள் யாவும் எவர் எவருக்கு எந்தெந்த வழிகளில் எவ்வாறு போய் சேர வேண்டும்? அவை யாவும் எவ்வாறு நிர்வகிக்கப்படல் வேண்டும் என்பதனை கல்லறையில் அல்லது சாம்பல் மேட்டில் இருந்து கொண்டு வழி நடத்தும் ஒரு உத்தரவு என கனடிய ஆங்கில கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும். இதனை உயிரோடு தெளிவாக இருக்கும் போதே செய்து வைத்திருக்க வேண்டும்.

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களில் ஒருவரின் உயிர் இழப்பின் பின்பு குறிப்பிட்ட பணம் எவருக்கு போய் சேர வேண்டும் என்பதில் 'மரண சாசன பத்திரம்' உறுதியாக கை கொடுக்குமா? என்பதில் கடந்த மார்ச் 12, 2008 இல் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண உயர்நீதிமன்றம் ரெயின்ஸ்வோர்ட் எதிர் ஹரிஹோயரி (Rains ford vs Gregoire) என்னும் வழக்கில் நீதியரசர் மசூஹரா (Justice J Masuhara) வழங்கிய தீர்ப்பு சட்ட ஒழுங்கின் செயல்பாடுகளை மேலும் உறுதியாக்கியுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண தலை நகரான விக்ரோரியாவில் வாழும் திரு. செரிவ் ஹோடன் நீல்சன் (Mr. Sheriff Gordon Neilson) என்பவர் கடந்த டிசம்பர் 28, 2004 இல் தனது 51வது வயதில் புற்றுநோய் காரணமாக மரணமடைந்தபோது அவரது ஆயுள் காப்புறுதியில் கிடைக்கும் பணம் $90,386.03 தொகையும் எவருக்கு போய் சேர வேண்டும் என்பதில் ஏற்பட்ட சட்ட சிக்கல் கடந்த மார்ச் 12, 2008 இல் நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை எவருக்கும் வழங்கப்படாது ஒதுக்கப்பட்டிருந்தது.

இங்கு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் வைத்திருப்பவர் தனது மனைவியை விவாவகரத்து செய்திருந்தபடியால் மரணத்தின் பின்பு பணம் பெற உரித்துடையவராக தனது சகோதரியினை நியமித்திருந்தார்.

குடும்பத்தில் மனைவியை விவாகரத்து செய்திருந்தாலும் தமது ஒரேயொரு மகள் 9 வயதில் இருக்கும்போது மகளோடு கனிவான உறவு இருந்தபடியால் மகளின் பெயரினை பணம் பெற உரித்துடையவராக விண்ணப்பங்களில் கைச்சாத்திட்டு வைத்திருந்தாரே தவிர ஆயுள் காப்புறுதி கம்பனியின் பதிவுகளில் சட்டரீதியான அவர்களின் விண்ணப்ப படிவத்தில் கைச்சாத்திட்டு எந்தமாற்றங்களும் செய்து கொள்ளாது டிசம்பர் 28, 2004 இல் மரணமடைந்து விட்டார்.

இறுதியில் 28 வயது நிரம்பிய செல்வி கெல்லி மரி ரெயின்ஸ்வோர்ட் (Ms. Kelly Marie Rainsford) அவரது இறுதி மரணசா-சன பத்திரத்துடனும், ஒலிப்பதிவு வாக்கு மூலங்களுடனும் நீதி கேட்டு நின்றிருந்தார்.

60 வயது நிரம்பிய அவரின் சகோதரி திருமதி சான்டிரா ஜோன் ஹரிஹோய்ரி (Mr. Sandra Joan Gregoire) என்பவர்




மாற்றினார். மகள் 13 வயதினை அடைந்தபோது அவர்களுக்குள் முரண்பாடு என ஏதோ உருவாகியதால் மீண்டும் ஆயுள் காப்புறுதி பணம் பெற உரித்துடையவராக சகோதரியினை விண்ணப்பங்களில் கைச்சாத்திட்டு மாற்றிவிட்டார்.

அவர் மரணமடைந்தபோது சகோதரியின் பெயரே ஆயுள்காப்புறுதியில் பணம் பெறுவதற்கு உரித்துடையவராக கைச்சாத்திடப்பட்ட கம்பனியின் (Great West Life Insurance Company) பதிவுகளில் இருந்தது. இறுதியாக 2004 ஆகஸ்ட் மாதம் அவரது சுவாசப்பையில் ஏற்பட்ட புற்றுநோய் மோசமான நிலைமைக்கு வந்து மரணமடையும் காலமும் குறிப்பிட்டிருந்த போது மகளுக்கும் தந்தைக்கும் உள்ள உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. மரணமாகும் காலம் நெருங்கும்போது ஏற்கனவே சகோதரிக்கு சகல சொத்துகளும் போய் சேர வேண்டும் என்ற மரண சாசன பத்திரத்தினை ரத்து செய்து விட்டு, அக்ரோபர் 04, 2004 இல் தனது ஓய்வூதிய பணம், ஆயுள் காப்புறுதி பணம் யாவும் அந்த வருடம் 28 வயதில் இருந்த மகனுக்கு போய் சேர வேண்டும் என புதிய மரண சாசன பத்திரம் சட்டரீதியாக கைச்சாத்திட்டு வைத்திருந்தார்.

சகோதரி தனது பணம், சொத்துகளை தவறான முறையில் கையாள்வது என குறிப்பிட்டு அவருக்கும் தனக்கும் எதுவிதமான உறவும் இல்லை என மரண தறுவாயில் இருக்கும்போது ஒலிப்பதிவில் முறைப்பாடும் வழங்கியிருந்தார். தனது இறுதி மரண சாசன பத்திரத்தில் ஆயுள் காப்புறுதி பணம் மகளுக்கு போய் சேர வேண்டும் என குறிப்பிட்டு கைச்சாத்திட்டு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களின் பதிவுகளில் தனது பெயர் இருப்பதனை ஆதாரமாக வைத்துக் கொண்டு நீதி மன்றில் நின்றார். அவர்களின் இரு பக்கங்களிலும் உறவுகளுக்குள் ஏராளமான சம்பவங்கள் நிகழ்வுகள் யாவும் ஆதாரமாக இரு பக்கத்தினாலும் சமர்ப்பிக்கப்பட்டது.

இறுதியில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பது ஒருவர் மரணமாகும் திகதியில் எவர் பெயர் ஆயுள்காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்ததோ அவர் மட்டுமே ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் பெற உரித்துடையவர் என தீர்ப்பளித்து அந்தப் பணம் சகோதரிக்கே போய் சேர்ந்தது.

(இறுதியாக வாசகர்களுக்கு ஓர் எச்சரிக்கை! தங்கள் தங்கள் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களில் எவருக்கு பணம் போய் சேர வேண்டும் என்பதனை ஒருமுறை பரிசீலனை செய்து கொள்ளுங்கள்.)



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

**AUM WELLNESS CLINIC IN**

Healing Massage, Suffering From Pain?

**Get Relief From:**

முதுகுவலி கழுத்துவலி தோள்பட்டைவலி
முழங்கால் வலிகள் தீராததலைவலி நரம்புப்பிடிப்பு
நீரிழிவு தூக்கமின்மை கொலஸ்ரோல்
உடல் எடை குறைத்தல் இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata



Based on Appointment

*Cell: 416.890.9217 Office: 647.304.6046*
*5215 Finch Ave. E. #220, Toronto, ON*


# அந்நியர்களும்...

### 16ஆம் பக்கத்தொடர்ச்சி

செயற்பாடுகளுக்கு இலகுவில் பாவிக்கப்படக் கூடியதாக இருக்கும். அத்துடன் புதிய கலங்களுக்கும் தகவல்களை சுலபமாக அனுப்பக்கூடியதாகவும் இருக்கும். சடம் ஒன்று உயிருள்ளதா என அறிவதற்கு அது எவ்விதம் தகவல்களைச் சேமிக்கிறது, விருத்தி செய்கின்றது, எவ்விதம் அதனைப் பாவிக்கின்றது என்பவற்றை நாம் அறிந்திருக்க வேண்டியுள்ளது.

தகவல்கள் ஒவ்வொரு கலங்களின் உள்ளும் நீண்ட காபன் சங்கிலி தொடர் மூலக் கூறுகளாக சேமிக்கப்பட்டுள்ளன. இதனையே நாம் DNA (deoxyribonucleic acid) (டிஒக்சி-றிபோ-நியூகிளிசிக் அசிட்) என்னும் பரம்பரை அலகுகள், அதாவது மரபணுக்கள் என்கின்றோம். இந்த மரபணுக்கள் நீண்ட, திருகப்பட்ட ஏணி வடிவில் அமைந்தவை. இதனை இருபுரி எனவும் அழைப்பார்கள். ஏணியின் இரு தண்டுகளும் சீனியாலும் பொசுபேற்றாலும் அமைந்தவை. இந்த இரண்டு தண்டுகளையும் பல படிகள் இணைத்திருக்கும். இந்தப் படிகள் ஒவ்வொன்றும் இவ்விரண்டு அடிப்படை மூலக்கூறுகளால் ஆனவை. மொத்தமாக நாலு வகை அடிப்படை மூலக்கூறுகளே உள்ளன. இருப்பினும் அவற்றின் வெவ்வேறான சோடிச் சேர்க்கைகள் கலமொன்றின் தொழிற்பாட்டு வடிவங்களைத் தருகின்றன. மனிதரின் கலமொன்றில் சுமாராக 4.5 பில்லியன் சோடிகளாக்கப்பட்ட அடிப்படை மூலக்கூறுகள் 1.5 மீற்றர் நீளமான இருபுரி சங்கலித் தொடராகக் காணப்படு கின்றன. இதன்படி மனிதனின் கலம் ஒன்றைச் செயற்படுத்துவதற்கு 4.5 பில்லியன் தகவல்கள் - சமிக்கைகள் தேவைப்படு கின்றது. மனிதர்களின் உடலில் மொத்தம் 60 x $10^{12}$ கலங்கள் உள்ளன. எமது உடலின் கலங்களில் உள்ள இருபுரிகள் (DNA) எல்லாவற்றினது நீளமும் சேர்ந்தால், அது புவியிற்கும் கதிரவனுக்கும் இடையில் உள்ள தூரத்தின் 600 மடங்காக அதாவது 90 x $10^{12}$ மீற்றர்களாக இருக்கும்.

இந்த டீஎன்ஏ என்பது உண்மையிலேயே ஆச்சரியமான ஒன்று. பொதுவாகவே மனிதர் களிடம் உள்ள அத்தனை கலங்களிலும் உள்ள 1.6 மீற்றர் நீளமான டீஎன்ஏக்களும்




ஒரே மாதிரியானவை. அவ் ஒவ்வொரு டீஎன்ஏக்களிலும் உள்ள 4.5 பில்லியன் தகவல்களும் அதாவது சமிக்கைகளும் அதனுள் தொகுதி, தொகுதிகளாக சேர்ந்து காணப்படுகின்றன. இந்த சமிக்கைகளின் தொகுதிகள்தான் உடலின் உறுப்பு ஒன்றின் தன்மையை அறிந்து அதன் செயற்பாட்டுக் கான சமிக்கைகளை அல்லது கட்டளை-களை ஒழுங்குபடுத்திக் கொடுக்கின்றன. இது கூட கையின் கலங்களில் உள்ள டீஎன்ஏக்கள் தம்மிச்சையாகச் செய்வதில்லை. கை இருக்கும் சூழலின் நிலையறிந்து, அதன் தூண்டுதலுக்கு, நிலைக்கு ஒத்ததாகவே நடக்கும். எடுத்துக் காட்டாக, எங்களது கையில் உள்ள கலங்களின் டீஎன்ஏக்களில், கையின் தொழிற்பாட்டுக்கான சமிக்கைகள் மட்டுமே, சூழலின் தன்மைக்கு ஏற்ப செயற்பட்டுக் கொண்டு இருக்கும். அக்கலங்களில் எங்கள் மூளையின் செயற்பாடுகளுக்கான தகவல் தொகுதியும் உண்டு. அதேபோலவே மற்ற உறுப்புக் களுக்கான தகவற் தொகுதிகளும் உண்டு. ஆனால் அவையங்கு செயற்படுவதில்லை.

# கனடிய வங்கி...


### 07ஆம் பக்கத்தொடர்ச்சி

தொடரும்வரை ரஷ்யாவின் வட்டிவீதத்தில் அதிகரிப்பையும் கனடிய வட்டிவீதத்தில் இறங்கு நிலையையும் எதிர்பார்க்கலாம்.

பொதுவாக கனடிய மத்திய வங்கி வட்டிவீதத்தை குறைக்கும்போது, பெரிய நிதி நிறுவனங்கள் தமது வட்டி வீதத்தையும் அதே பெறுமதியால் குறைப்பது வழமையாகக் கொண்டுள்ளன. ஆனால் இம்முறை வழமைக்கு மாறாக இதுவரை எந்த ஒரு நிதி நிறுவனமும் முதன்மை வட்டிவீதத்தை (Prime rate) குறைக்க வில்லை என்பது கவலையான நிகழ்வு.

இருந்தும், அனேகமான நிதி நிறுவனங்கள் தமது 5 வருடம், 10 வருடங்களிற்குரிய மாறாத வட்டிவீதத்தை (Closed Mortgage) குறைத்துள்ளன. 5 வருடத்திற்குரிய வட்டிவீதம் 2.84% ஆக குறைக்கப் பட்டுள்ளது. கனடிய மத்திய வங்கி மேலும் தனது வட்டிவீதத்தை குறைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனவரி 28, 2015 அன்று அனேகமான நிதி நிறுவனங்கள் முதன்மை வட்டி வீதத்தை




0.15% இனால் குறைத்து 2.85% ஆகக் காணப்படுகின்றது.










**Ancaster, ON**
Brand new 4 Bedroom home in Ancaster, open layout. 9ft ceilings. Main floor office.

**Mccowan/401**
Monarch Built Condo. 1+ 1 bedroom. Stunning Unobstructed View, Walk to STC

**Markham/ Mcnicoll**
Open up your dream restaurant business in heart of Scarborough. Located in a high traffic area.

**Hwy 7/Kinsale**
A Special Place To Turn Dreams & Visions Into APlace To Call Home! Build Your Estate Dream Home In The Large Size Lot. Backing Into Small Creek.

I can find you the right home faster!

**DINESH JEGANATHAN**
Sales Representative
Cell: 647-895-3466

Lets Begin the Search for Your Dream Home



HomeLife Today Realty Ltd., Brokerage*
each office independently owned and operated
talk2dinesh@live.com

REFINANCE TO LOWER RATES
& SAVE 75%

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000@2.9% | 1,498.02 | - |
| Car Loan | 21,000@7.5% | 764.25 | 0.00 |
| Line Of Credit | 16,000 @6.5% | 566.67 | 0.00 |
| Line Of Credit2 | 12,500 @7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @24% | 150.00 | 0.00 |
| | | | |
| New Mortgage Payment | 386,500@2.5% | | 1,524.55 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | 4,014.20 | 1,524.55 |

MONTHLY SAVING
$2,489.65

VERICO MORTGAGE BROKERS NETWORK
APPLY ONLINE kiruba.ca OR Call Me

ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
Lic# 11995
305-5200 Finch Ave East
Scarborough, ON. M1S 4Z5

KIRUBA
THANABALASINGHAM
Mortgage Agent
Lic# M12002440

416.298.2777
info@kiruba.ca

# திரை விமர்சனம் - பிகே (இந்தி)

இந்திய ஊடகங்கள் முழுக்க இப்போது 'பீகே' பற்றித்தான் பேச்சு. அப்படியென்ன விசேஷம் என்கிறீர்களா? ஒரு பக்கம், கடவுள் என்று ஒருவர் உண்டா இல்லையா என்பதைப் பற்றி இப்படம் செய்யும் தத்துவ விசாரணை உருவாக்கிய சர்ச்சைகள். இன்னொரு பக்கம், 300 கோடிக்கும் அதிகமாக வசூலித்து இந்திய சினிமாவில் இப்படம் நிகழ்த்தியிருக்கும் சாதனை! உலகில் மதத்தின் பேராலும் கடவுளின் பெயராலும் நடக்கும் அத்தனை விநோதங்களையும் அக்கிரமங்களையும் கேள்வி கேட்கிறது 'பிகே'. அப்படியென்றால், 'பிகே' நாத்திகம் பேசும் படமா என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில். ஆனால், நாத்திகர்கள் என்ன பேசுவார்களோ அதனையே பேசுகிறது. குழப்பமாக இருக்கிறதா? ஆனால், படம் குழப்பவில்லை. இப்படத்தில் கலையும் அரசியலும் சரியான கலவையில் இணைந்துள்ள அற்புதம் நமக்குள் செய்யும் மாயம் இது.



கதாநாயகன் அமீர்கான் ஒரு வேற்றுக் கிரகவாசி. படத்தில் துவக்கத்தில் பறக்கும் தட்டில் வந்து பூமியில் இறங்குகிறார். வந்ததும் தன் ரிமோட் கண்ட்ரோலை ஒரு திருடனிடம் பறிகொடுக்கிறார். பூமியில் மனிதர்கள் அணியும் உடை, பேசும் மொழி, அவர்களின் கற்பிதங்கள் எல்லாம் புரிய பிகேவுக்கு பல நாட்கள் ஆகின்றன. இந்நிலையில் கடவுள் என்கிற ஒன்றை பிகே கேள்விப்படுகிறார். கடவுளுடன் உரையாட முயன்று தோற்றுப் போகிறார். ஆனாலும், தொடர்ந்து கடவுளைத் தேடி அலைகிறார். கடவுள் அவர் முன் தோன்றவே இல்லை. கடவுளை அடிப்படையாகக் கொண்டு, இப் பூமியில் உள்ள பல்வேறு மதங்களையும் அவை நிறுவனமயப்பட்டிருப்பதையும் தெரிந்து கொள்கிறார். அதனைப் புரிந்து கொள்ள முயல்கிறார். அம்முயற்சியில் அவர் எழுப்பும் நியாயமான கேள்விகளும் அவற்றை எதிர்கொள்ள முடியாத மத வாதிகள் அவரை விரட்டுவதுமாக முற்பாதி செல்கிறது. உலகில் கடவுள் இல்லை என்று சொன்ன அறிஞர்களையோ தத்துவங்களையோ வாசித்தவன் இல்லை பிகே. வெகு சாமானியன், கொஞ்சம் அப்பாவி. ஆனாலும், ஒரு மழலையின் அறியாமையுடன் அமீர்கான் கடவுள்கள் குறித்து கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல இயலாமல் பூமியின் மனிதர்கள் திணறுகிறார்கள்.

எந்தக் கடவுளை எப்படி வழிபடவேண்டும் என்று அறியாமல் சூடம் பத்தியுடன் தேவாலயத்துக்குச் செல்வது, வைனுடன் மசூதிக்குள் செல்வது, வெள்ளுடை அணிந்த இந்துப் பெண்ணை விதவை என்று அறிமுகம் செய்துவைத்த ஞாபகத்தில் வெள்ளுடை அணிந்த கிறிஸ்தவ மணப் பெண்ணை விதவை என்று நினைத்துக்கொண்டு பேசுவது, குழம்பிப்போய் மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளின் உடலில் இன்ன மதம் என்று ஏதாவது சின்னமிருக்கிறதா என்று பார்ப்பது என மனிதர்கள் பூமியில் உருவாக்கியிருக்கும் பல்வேறு பழக்க வழக்கங்களையும் கேலியுடன் வெளிச்சம் போட்டுக் காட்டி அர்த்தமற்றதாக்குகிறது பிகே. படத்தின் இறுதிக்காட்சி கண்ணீர் மல்கவைக்கக்கூடியது. கதாநாயகியின் மீதான காதலையும் கண்ணீரையும் மறைத்து கொண்டு பிகே விண்கலம் திரும்புகிறார். அப்போது அவள் கேட்கிறாள்: 'நீ கொண்டு போகும் கேசட்டுகளில் எல்லாம் என்ன இருக்கிறது?'. அதில் அவளுடைய குரலை மட்டுமே அவர் பதிவு செய்து எடுத்துப் போகிறார். ஆனால் அவளிடம், இவ்வுலகின் போக்குவரத்து சத்தங்கள், பறவைகள், விலங்குகளின் குரல்கள் உள்ளன" என்று பொய் சொல்கிறார். அவள் நமக்குச் சொல்கிறாள் இவ்வுலகிற்கு வந்து அவன் பொய் சொல்லக் கற்றுக்கொண்டான். நமக்கு அன்பை கற்றுத்தந்துவிட்டுச் செல்கிறான்.

தேவையான அளவு ஒளிப்பதிவு, உருக

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

# Parkway Mall Mobilicity !!!

$50 OFF COUPON

New Year SPECIAL

# $28/mo

Transfer Your # to Mobilicity

## UNLIMITED Talk, Text & DATA

UNLIMITED Local Calling
UNLIMITED Ontario Long Distance
UNLIMITED Text messaging
UNLIMITED DATA, Internet & Mobile-Hotspot
FREE Caller ID, Call Waiting and more...



| Samsung T199 | Samsung Gravity Q | Samsung Galaxy T399 | LG L70 | Moto G (2 gen) | Samsung Galaxy S4 |
|---|---|---|---|---|---|
| ~~$99.99~~ | ~~$99.99~~ | ~~$199.99~~ | ~~$229.99~~ | ~~$289.99~~ | ~~$649.99~~ |
| $0 | $39.99 | $99.99 | $129.99 | $229.99 | $309.99 |

No Contract !!
No Credit Check !!

PHONES $50 OFF


You can bring in your own phone

ONLY at

Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229

mobilicity
Now that's smart.™

Taxes are extra. $7 per month credit is provided to customer's plan of originally $35/mo ($25 Plan plus $10 DataAdd-on) for 4 months when customer transfers his/her number on a new activation, and may not be redeemed for cash and contain no cash value. Offer Credit valid only while customer is on automatic monthly payments (preauthorized credit/debit payment). Restrictions may apply on combining offers with other offers or promotions and only applicable to new activations. $50 off coupon can only be applied on phones and have been already on above phones. All unlimited features included in each plan/add-on, including unlimited talk, text and data features, must originate and be used within the Mobilicity Unlimited Zones. Premium and special numbers are excluded. Additional terms and conditions apply. Subject to change without notice. Warranty of the phones may vary, please ask for details.


Markham NS Dental
Care, Comfort, Convenience, Confidence.......
SPEAK OUT
• Family Dentist • Cosmetic Dentist • Braces • Implant
Dr. Nalini Suntharsan & Associates
Family and Cosmetic Dentistry
905 472 4111
www.markhamNSdental.com

# GOLD CLUB WINNER 2014






## ANTONIPILLAI LOURDSON

என்னை இந்த வெற்றியை அடையச் செய்த என் உயிருக்கும் மேலான வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் எனது குடும்பத்தினர் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## வீடு விற்பனை செய்யும் வாடிக்கையாளர்களே!

- உங்கள் வீட்டை மிகவும் சிறந்த விலையில் சில நாட்களில் விற்றுத்தரப்படும்.

*** MY LISTING COMMISSION ONLY $3500 + HST**

வீடு விற்பனையில் பல அனுபவங்களை கொண்ட உங்கள் நண்பன் லூட்சனை அழையுங்கள்

**CONTACT: 416.738.8824**

HomeLife / Future Realty Inc., Brokerage*
205 - 7 Eastvale Dr. Markham. ON L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229

# வீடுகள் வாங்க விற்க......



**SHEPPARD & MEADOWVALE**
Bedrooms: 4
Washrooms: 3
Price: $710,000



**BLACK CREEK & WESTON**
Bedrooms: 3 + 1
Washrooms: 2
Price: $599,000



**SHEPPARD & KENNEDY**
Bedrooms: 3
Washrooms: 1
Price: $525,000



**OLD HARDWOOD & PARKINS**
Bedrooms: 4 + 2
Washrooms: 4
Price: $560,000



**CHURCH & ROSSLAND**
Bedrooms: 4
Washrooms: 3
Price: $499,00



**ROSSLAND & SALEM**
Bedrooms: 4
Washrooms: 4
Price: $639,00



**TAUNTON & AUDLEY**
Bedrooms: 4
Washrooms: 3
Price: $588,00



**WESTNEY & SULLIVAN**
Bedrooms: 4
Washrooms: 4
Price: $479



**STEELES & MIDDLEFIELD**
Bedrooms: 4 + 2
Washrooms: 4
Price: $699,00



**MARKHAM & ELLESMERE**
Bedrooms: 3 + 1
Washrooms: 2
Price: $489,00



**MORNINGSIDE & MORNINGVIEW TR**
Bedrooms: 4
Washrooms: 3
Price: $649,900

என்னிடம் வீடு வாங்குபவர்களுக்கு இலங்கை அல்லது கியூபா சென்று வர எந்தவித குலுக்கல் இன்றி இலவச விமானச்சீட்டு வழங்கப்படும்

## முதலீட்டாளர்களே இதோ உங்களுக்கு ஒரு நற்செய்தி!

**MARKHAM & STEELES**க்கு அருகாமையில் ஒரு வர்த்தக நிலையம் விற்பனைக்கு உண்டு. மிகவும் இலாபகரமான விலையில் மூன்று வருட **Lease Agreement** செய்து தரப்படும்.

***My listing Commission $3500 Only***



**Lourdson Antonipillai**
Sales Representative
**Dir: 416.738.8824**
E-mail - lourdson29@hotmail.com
**HomeLife / Future Realty Inc., Brokerage***
205 - 7 Eastvale Dr. Markham. ON L3S 4N8
Bus:905.201.9977
Fax: 905.201.9229
* Independently Owned & Operated

# அறு சுவைகளின் அரசன்
# இல்லத்தரசிகளின் முதல் தெரிவு




**NIRU BRAND**

தயாரிப்புக்கள்

**தரத்தில் சிறந்தவை தமிழ் கடைகளில் கிடைக்கும்**

Niru Niru
நிரு
பிராண்ட்

**416.750.1976**

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

◊ கனி ◊

'இவர்களைப் பரிசோதனை செய்த அந்த வேற்றுக்கிரக மனிதர்கள் தாங்கள் எங்கிருந்து வந்திருக்கின்றார்கள் என்ற விபரத்தையும் கூறியிருக்கின்றார்கள். விண் வெளியினைப் பற்றி ஒருவித அறிவும் இல்லாத இவர்கள், தங்கள் கண்ட மனிதர்கள் சீற்றா ரெற்றிக்குலரி என்ற விண் மீன் கூட்டத்தில் உள்ள விண்மீன் ஒன்றில் இருந்து வந்ததாக அம்மனிதர்கள் கூறிய-தாகக் கூறுகின்றார்கள். அந்த விண்மீன் கூட்டம் இருக்கின்ற இடத்தினையும் தெளிவாக அந்த ஏலியன்கள் கூறியிருக்கி றார்கள். அவர்கள் விபரித்த அவர்களது விண்மீன் இருக்கின்ற வான ஒழுங்கினைப் பார்த்தால், நாங்கள் கூறுகின்ற 'ஒறியன்' விண்மீன் கூட்டத்தில்தான் அந்த விண்மீன் இருக்கின்றது. சிவாவுக்கோ, நீலவேணி யிற்கோ ஒறியன் என்றால் என்னவென்றே தெரியாது. சுாதாரணநிலையில் விண் வெளியை நிமிர்ந்து பார்த்திருப்பார்களோ என்றால் சந்தேகம்தான். அப்படியானவர்கள் சிற்றா ரெற்றிக்குலரியைப் பற்றிக் கூறுவதைப் பார்த்தால், இவர்களை ஏலியன்கள்தான் கடத்தியிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமே யில்லை' என்றார்.

எல்லோரும் ஆச்சரியத்துடன் என்ன கூறுவதென்று தெரியாமல் அப்படியே இருந்திருந்தார்கள். பொதுவாகவே ஏலியன் விடயங்களை வெறும் விஞ்ஞானப் புனைகதை போலவே கருதிக் கொண்டிருந்த ஸ்ரீபன், நம்பமுடியாமல் நம்பிக் கொண்டு இருந்தார். ஸ்மித், வேற்றுக்கிரக மனிதர்கள் பற்றித் தெரிந்து வைத்திருந்தார். ஆனால், தனது வாழ்க்கையில் நேரடியாகவே அவர்கள் சம்பந்தப்படும் விடயமொன்று வருமெனக் கனவிலும் கூட அவர் நினைத்திருக்கவில்லை.

மெதுநடை போட்டுக் கொண்டு, மெதுவான குரலில், ஆனால் உறுதியான தொனிப்பில் றோயர் தமது உரையை நிகழ்த்திக் கொண்டிருந்தார். இடையிடையே நிற்பதும் கைகளை அகல விரித்து தனது ஆச்சரியத்தை வெளிப்படுத்துவதுமாக, மிகச் சுவாரசியமாக இரசித்து இரசித்து அவர் ஏலியன் விவகாரத்தை விளங்கப்படுத்திக் கொண்டிருந்தது மிக அழகாக இருந்தது. அடிக்கடி மூக்குக் கண்ணாடியை இயல்பாகவே மேலே தள்ளிவிட்டுக் கொண்டிருந்தை திரைப்பட நடிகர்கள் யாராவது பார்த்திருந்தால் எதுவிதப்பட்டும் தமது அடுத்த படத்தில் அதனை தனது பழக்கமாக்கிக் காட்டியிருப்பார்கள்.

கைகளிலோ, அல்லது வேறு இடங்களிலோ எந்தவொரு துண்டுக் குறிப்புகளும் இல்லை. வெறுமனே ஒரு நீல நிறக் கோவையைக் மட்டும் கொண்டு வந்திருந்தார். அதனைக் கூடத் திறந்தே பார்க்கவில்லை. சிவா, நீலவேணி என்ற பெயர்களைக் கூடச் சர்வ சாதாரணமாகவே அவர் உச்சரித்தது, அவ்விடயத்தில் எவ்வளவுக்கு அவர் லயித்திருந்தார் என்பதைக் காட்டிக் கொண்டு இருந்தது. 'இந்த இடத்தில் இன்னொரு விடயத்தைக் கூறவேண்டும்' என்றவர், சற்று நேரம் நின்று எல்லோரையும் நிமிர்ந்து பார்த்தார். என்ன கூறப் போகிறாரோ மற்றவர்கள் ஆவலுடன் அவரையே பார்க்க, "எலியன் என்கவுண்டர், அப்டக்சன் விடயங்களில் மாட்டிக் கொண்ட பலர், இந்த சிற்ற ரெற்றிக்குலாரியைத்தான் ஏலியன்களின் இருப்பிடமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அதுதான் இங்கேயும் குறிப்பிடப்பட்டுள்ளது." என்றவர், மெதுவாகக் குனிந்தபடியே இரண்டு கவடுகள் வைத்து விட்டு நின்று மீண்டும் பார்த்தார். இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என்று கேட்பது போல இருந்தது அவரது அந்தப் பார்வை.

சற்று நேரம் எல்லோரமே அமைதியாக இருந்தார்கள்.

"எல்லோருமே சிற்றா ரெற்றிக்குலரியைத்தான் குறிப்பிட்டார்களா?" ஸ்மித் கேட்க, அவரைப் பார்த்துவிட்டு தொடர்ந்தார், "அப்படியில்லை. தனியவே சிற்றா ரெற்றிக்குலரியைத்தான் கூறினார்கள் என்றில்லை. ஆனால் இதைத் தான் பலர் குறிப்பிட்டுள்ளார்கள்." றோயர் பதிலளித்த போது, 'இதிலை ஏதோ விடயம் இருக்கிறது போலை" என்றார் வித்தியாதரன்.

"நீங்கள் சரியாகக் கூறினீர்கள். ஏலியன் விவகாரம் என்பது ஒதுக்கி விடக் கூடியதில்லை. நன்றாகவே ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஒருவேளை அது எங்களது தொழில்நுட்ப விடயங்களைக் கூட உயர்வாக்கிவிடும் என நினைக்கிறேன்" றோயரின் கண்களில் ஒருவித ஒளிர்வு தோன்றி மறைந்தது போல இருந்தது.

நடையின் வழியிலே அறையின் ஒரு மூலைக்கு வந்து விட்ட றோயர், ஒருகணம் நின்று எல்லோரையும் தனித்தனியாகப் பார்த்தார். அவரது கண்களில் மற்றவர்களின் மனநிலையை அளவிடும் தன்மையினைப் போன்ற பார்வை ஒன்று ஓடி, எல்லோர் முகங்களையும் நனைத்து வந்தது. ஏனோ தெரியாது அவரது முகத்தில் ஏதோ ஒரு பெரிய கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்து விட்டது போன்ற வெளிப்புத் தெரிந்தது. நின்றவர் அவர்களைப் பார்த்து பொதுவாகவே கேட்டார். நண்பர்களே, உங்களுக்கு நான் கூறியவை தெளிவாக இருக்கின்றனவா? ஏதாவது விளக்கங்கள் தேவையா? எனக் கேட்டார்.

ஸ்மித் "வொண்டபுல்! என்னை உண்மை யிலேயே எங்கேயே கொண்டு சென்று விட்டீர்கள்" என்றார். அவரின் முகத்தில் இன்னமும் பிரமிப்பு மாறாதிருந்தது.

'அருமையான விளக்கம். நான் இவ்வளவு விஞ்ஞான விபரங்கள் சங்கிலித் தொடராக இந்த ஏலியன் விடயத்தில் இருக்கும் என்று நினைக்கவில்லை. விபரங்கள் தெளிவாக இருக்கின்றன. நடந்த சம்பவங்களைப் பார்த்தால் உண்மை என்றுதான் நம்ப வேண்டும் போலை இருக்கு' ஸ்ரீபன் கூற, புன்சிரிபோடு தலையாட்டிய றோயர் 'இன்னமும் கனக்க விடயங்களை என்போன்ற ஏலியன் ஆய்வாளர்களிடம் இருந்து சாதாரண மக்கள் தெரிந்து கொள்ளலாம். ஏனென்றால், எங்களின் முழுநேர வேலை போன்றது அந்த யூஎவ்ஓ ஆய்வு.. நாங்கள் கூறுபவற்றில்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

TBC Toronto Business College



DIPLOMA PROGRAMS
ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks
BUSINESS ADMINISTRATION
26 Weeks
COMPUTERIZED ACCOUNTING
26 Weeks
New FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks
MEDICAL OFFICE ADMIN.(MOA)
32 Weeks
PERSONAL SUPPORT WORKER(PSW)
26 Weeks (NACC Diploma)

FREE TRAINING
★ EI
★ 2005 EI
★ 5 Maternity / Parental Benefits Diploma
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000

PART TIME COURSES
MS Office 2010, Quick Books 2013
Simply Accounting 2013, Accpac 6.1
Canadian Securities Course
First Aid & CPR
Food Handler Certification

• 100% Instructor Led Training • Small Class Sizes
• Student Friendly Environment • Ample Free Parking
• Professional & Experienced Staff • TTC Accessible
• Career Planning & Counselling

416-291-5155 / 416-451-6680
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# BASEMENT RENT

**MARKHAM & BRIMORTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.400.3559**

**KENNEDY & EGLINTON**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, internet. Avail. Anytime. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.342.9417**

**MARKHAM & EGLINTON**
4 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.929.2345**

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt also available.
**647.500.4564 / 905.472.1370**

**BIRCHMOUNT & LAWRENCE**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, subway, school. Family or stu- dents preferred. Avail. immediately.
**416.701.9942 / 647.883.2257**

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry cable, internet, multicultural channels. Close to TTC, mall. Avail. Anytime.
**416.509.0102 / 416.321.1948**

**BIRCHMOUNT & ST.CLAIR**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, washroom. Close to Warden Subway, TTC, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.827.7495**

**FINCH & WARDEN**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 15, 2015.
**647.388.2576 / 416.896.2511**

**WESTNEY & ROSSLAND**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.501.4720**

**VICTORIAPARK & LAWRENCE**
1 Bedroom for rent in a main floor. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, temple, school. Avail. immediately.
**416.288.9575 / 647.866.9575**

**MCCOWAN & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately. Bachelor or couple preferred.
தொடர்புகளுக்கு: **416.907.4777**

**MIDDLEFIELD & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, washroom, parking, laundry, wifi unlimited. Avail. immediately. Close to mall, school.
தொடர்புகளுக்கு: **647.710.1847**

**STOUFFVILLE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.888.8255**

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, Elementary & Highschool.
தொடர்புகளுக்கு: **416.823.7576**

**MORNINGSIDE & MCNICOLL**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.830.4653 / 416.759.4653**

**MCCOWAN & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, school, park. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.335.5028**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. February 01, 2015.
தொடர்புகளுக்கு: **647.894.7787**

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC & etc. Avail. immediately. Single family preferred.
**416.284.0712 / 416.906.5353**

**MARKHAM & STEELES**
இப்படியாக எதிரிக்கு எதிரி நண்பன் எனும் அடிப்படையில் ராம்குமார், திருநங்கை, உபேன் பட்டேல் மூவரும் லிங்கேசனுக்கு எதிராக இணைகிறார்கள். இவர்களுடன் தியாவின் குடும்ப நண்பராகவும் டாக்டராகவும் இருக்கும் சுரேஷ் கோபியும் இணைந்துகொள்கிறார். சிறு வயதில் இருந்தே தியா மீது விருப்பமுடன் இருப்பவர் அவர். தியாவை லிங்கேசன் திருமணம் செய்யப்போவதால் அவர் மீது கோபத்தில் இருக்கிறார். இவர்கள் நால்வரும் இணைந்து சதி செய்கிறார்கள். முடிவாக சுவிட்சர்லாந்தில் இருந்து 'ஐ' என்ற அதி-பயங்கர வைரஸ் கிருமியை வரவழைத்து அதனை லிங்கேசன் உடம்பில் செலுத்துகிறார்கள். அது அவனை கூனனாக்கி, உடம்பெல்லாம் வீங்க வைத்து, முடியைக் கொட்ட வைத்து, முக அழகை சிதைத்து, அலங்கோலமாக்கிவிடுகிறது. ஏதோ எதிர்பாராத ஒரு நோயினால் தான் பாதிக்கப்பட்டதாக நம்பும் லிங்கேசன், ஆணழகனான தன் உடல் உருக்குலைந்து போனபின் தியா தன்னை ஏற்பாளா என்ற சந்தேகத்தில், தான் இறந்துவிட்டதாக அவளிடம் கூறச்சொல்லி விடுகிறான். தான் திட்டமிட்டு இப்படியொரு நிலைமைக்கு ஆளாக்கப்பட்டோம் என்பதை பின்பு வேறொரு மருத்துவரால் லிங்கேசன்

தொடர்ச்சி 34ஆம் பக்கம்




**Kingsway-Queensway**
சந்திக்கருகாமையில்

- எட்டு நிமிடங்களில் ரொரன்ரோ டவுன் ரவுன்
- இரண்டு நிமிடங்களில் கார்டினர் விரைவுப் பாதை
- நிமிடங்களில் பாடசாலை, வணிக மையங்கள்
- 24 மணிநேர பாதுகாவலர்கள் மற்றும் ரெனிஸ் கோர்ட், உடற்பயிற்சியரங்கம், உள்ளக,வெளியக நீச்சல் குளங்கள்
- குறைந்த விலையில் சகல வசதிகளும் உள்ளடங்கிய ஒரு அறை நவீன **Condo**

**Ragunathan** Mahesu - Sales Rep - **416-450-6833**

VEEDU REALTY INC. BROKERAGE

**416-759.6000**

# கோடைகால விடுமுறை எனது நீங்காத நினைவு

இதுவரை கோடைகால விடுமுறையைக் கனடாவில் தான் கழித்து வந்தேன். இவ்வருடம் வரும் கோடைகால விடுமுறைக்கு ஒரு மாத விடுமுறையில் என் தாய் நாட்டிற்குப் போகப் போகிறேன் என்ற தகவலை அறிந்ததும் என் மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சியை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏனெனில் எனது அம்மம்மா, அம்மப்பா அங்குள்ளவற்றை கூறி கேள்விப் பட்டிருக்கிறேன். அதை நேரில் காணப் போகிறேன் என நினைத்து அளவற்ற சந்தோசம் அடைந்தேன்.

எனது தாயுடன் கடைகளுக்குச் சென்று அங்குள்ள காலநிலைக்கேற்ற உடுப்புக்கள் சில உணவுப் பொருட்கள் என்பவற்றை வாங்கினோம். என் அம்மா, தம்பி, அம்மப்பாவும் நானும் ஆனி 26 ஆம் திகதி இங்கிருந்து விமானநிலையம் சென்றோம். ஆனால் எமக்கு 10 நாட்களுக்கு முன்னர் எனது மாமா, மாமி, பிள்ளைகள், அம்மம்மா ஆகியோர் சென்றிருந்தனர். பியர்சன் விமான நிலையத்திலிருந்து இரவு 10.40 மணிக்கு விமானம் புறப்பட்டது.

விமானத்தில் விபரம் தெரிந்து நான் செல்வது புது அனுபவமாகையால் பயமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. விண்ணுந்தில் தரப்பட்ட உணவு எதுவுமே எனக்கு பிடிக்கவில்லை. ஆனாலும் பிடித்தவற்றை உண்டேன். எட்டு மணித்தியாலங்களின் பின் விமானம் ஜேர்மன் விமானநிலையத்தை அடைந்தது. அங்கு நடைமுறை சோதனைகளுக்குப் பின்பு அங்கிருந்து சிறீலங்காவின் 'ஏயர் லங்கா' விமானத்தில் புறப்பட்டோம். அதில் தமிழ்படங்கள் பார்க்கக் கூடியதாக இருந்தது. அதிகாலை 4.30 மணியளவில் சிறீலங்கா விமானநிலையத்தை 10½ மணித்தியாலத்தின் பின் வந்தடைந்தோம். அங்குள்ள நடைமுறை சோதனைகளுக்குப் பின்னர் வெளியே வந்தோம். வெளியே வந்ததும் மிக வெப்பமாக இருந்தது. எம்மை ஊருக்கு அழைத்தும் செல்ல எனது மாமாவும் சித்தப்பாவும் காத்து இருந்தனர். அவர்களுடன் எல்லோரும் ஊருக்கு புறப்பட்டோம். வான் ஓடிக்கொண்டிருந்த நேரத்தில் நான் தூங்கி விட்டேன். ஒரு மணி நேரத்திற்குப் பின் அம்மப்பா என்னை எழுப்பினார். ஒவ்வொரு இடங்களை காட்டிக் கொண்டுவந்தார். சிறு மழையுடன் ஜில்லென குளிர்க்காற்று வீசிக் கொண்டிருந்தது. இடையில் இளநீர், றம்புட்டான் என்பனவற்றை சாப்பிட்டோம்.



வவுனியா நகர் தொடக்கம் யாழ்ப்பாணம் செல்லும் வரை இராணுவத்தினரை வீதி நெடுக பார்க்கக் கூடியதாக இருந்தது. அங்குள்ள வீடுகள், மக்கள் அணிந்திருந்த ஆடைகள் எல்லாமே கனடாவுடன் ஒப்பிடும் போது வித்தியாசமாக இருந்தன.

நாங்கள் மதியம் மூன்று மணிக்கு மாதக-லை வந்தடைந்தோம். நான் மாதகலுக்கு வந்ததும் என் அம்மம்மாவின் தம்பியும் அவரது மனைவியும், என் அம்மப்பாவின் தங்கையும் அவரது கணவரும் என்னை வந்து கட்டிப்பிடித்து மகிழ்ந்தனர். என் நலம் விசாரித்து, வீட்டை சுற்றிக் காட்டினர். அதன்பின் சொந்தக்காரர்கள் எங்களைப் பார்க்க வந்தனர். அவர்களுடன் கதைக்கும் பொழுது நாங்கள் கதைப்பதற்கும் அவர்கள் கதைப்பதற்கும் சிறிய வேறுபாடு தெரிந்தது.

அங்கு இருப்பவர்கள் எப்பொழுதும் வேலை செய்து மிகவும் சுறுசுறுப்பாக இருந்தனர். சத்துள்ள உணவுகளை உண்டு, பலமுள்ள வர்களாக இருந்தனர். இராணுவத்தினரின் நடமாட்டம் இருந்தாலும், அவர்களின் வாழ்க்கை சாதாரணமாக இருந்தது. மாதகலில் உள்ள இளைஞர்கள், யுவதிகள் பெரும்பாலானவர்கள் படிப்பில் கவனமுள்ள வர்களாகவும் தொழில் புரிபவர்களாகவும் காணப்பட்டனர். ஒரு சிலரே கட்டுப்பாடின்றி காணப்பட்டார்கள். இளையோர் முதல் பெரியோர் வரை அனைவரும் கைத்தொலைபேசி பாவனையாளர்களாக காணப்பட்டனர். கனடாவில் எல்லோரிடமும் கார் இருப்பது போல் அங்கு எல்லோரிடமும் மோட்டார் சைக்கிள்கள் இருந்தன.

மாதகலில் எனக்கு மிகவும் பிடித்த காட்சி பசுமையான வயல்காட்சி. அவ்வயல்களில் மக்கள் விவசாயம் செய்வதை பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவர்களின் கடுமையான உழைப்பைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். மாதகல் கடற்கரை காட்சியும் மிக அழகாக இருந்தது.

என் அம்மம்மாவின் தம்பியின் குடும்பம் ஆடு, கோழி, நாய் போன்ற செல்லப்பிராணிகளை வளர்த்து வருகின்றார் கள். நானும் என் இரு மைத்துனரும் அந்த ஆட்டிற்கு தினமும் உணவு கொடுத்தோம். மாதகலில் உள்ள கோவில்களுக்கும் சென்றோம். எல்லாக் கோவில்களும் அழகாக கட்டப்பட்டிருந்தன. கனடாவை விட அங்கு மக்களுக்கு கடவுள் பக்தி கூட என எனக்கு தோன்றியது.

போரினால் பாதிக்கப்பட்ட பல கட்டிடங்கள் இடிந்து காணப்பட்டன. மாதகலில் சில குடும்பத்தினர் உதவிகளற்றவர்களாக காணப்பட்டார்கள். அவர்களுக்கு நாங்கள் எம்மால் இயலுமான பண உதவி செய்தோம்.

நான் ஒரு பேச்சுப்பேச என் அம்மப்பாவின் அழைப்பின் பேரில் யாழ். மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலத்திற்கு சென்றேன். அப்பாடசாலை அதிபரின் வேண்டுகோளிற் கிணங்க அப்பாடசாலை மாணவர் முன்னிலையில் என் தமிழ் சொற்பொழிவை ஆற்றினேன். என் தமிழ் பேச்சாற்றலைக் கண்டு அங்குள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் என்னை பாராட்டினர்.

நான் சென்ற இடங்களில் ஓரிடம் நயினாதீவு. என் உறவினர்களுடன் நயினாதீவிற்குச் சென்றேன். நயினாதீவை வந்தடைய ஒரு கப்பலில் போனோம். இறைவனை வணங்கிய பின் கடைகளுக்குச் சென்றோம். மடத்தில் உணவு உண்டு வீட்டிற்குத் திரும்பினோம்.

யாழ். நகரில் உள்ள பூங்காவிற்குச் சென்றோம். இங்குள்ள பூங்காக்களை விட அங்கு அழகிய பூமரங்கள் காட்சி தந்தன. படங்கள் எடுத்த பின் குளிர்களி உண்டு மகிழ்ந்தோம். கொழும்பில் நின்ற வேளையில் மிருகக்காட்சி சாலைக்குள் சென்றோம். பெரிய பாம்புகளை கண்டு பயந்து விட்டேன்.

கோடைகால விடுமுறைக்கு மாதகலுக்குச் சென்றமை மிக மகிழ்ச்சியாக இருந்தது. கனடாவிற்கும் மாதகலுக்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்தேன். மீண்டும் மாதகலுக்குச் செல்ல காத்திருக்கின்றேன். இந்த விடுமுறைப் பயணம் என் நெஞ்சை விட்டு என்றென்று நீங்காது.



**ப. நிதுஷா**
அகவை 12

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

**Personal Prayer To The Holy Spirit**
Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - R.M -V.R



Our Mother of Perpetual Help

**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# EDUCATION

## Review Questions15 -3

**ADVANCED FUNCTIONS 12**

Determine the $x$ – intercepts, state the degree and the sign of the leading coefficient and describe the end behaviour of the graph of each polynomial function

a) $f(x) = (x-2)(x+4)^2$

b) $g(x) = 2(x-3)(x-5)^3$

c) $h(x) = -2(x+4)(x-2)^3$

➢ **Math 11**

(i) Factor $x^5$ - 16x

(ii)_ If a bus travelled 10km/h faster, it would take 2 h less time to make a 400km trip. Determine its speed?

➢ **FUNCTION 11**

*For what value (s) of K , the following function has no real roots.*

$f_{(x)} = k\,x^2 - 6x + k$

**Calculus 12**

(i) Differentiate, $\cos^2\frac{1}{x}$

(ii) Find the limits , $\lim_{x\to 0} \frac{\sin 2x + 3x}{2x + \sin 3x}$

➢ **MATH GR 10**

A plane flew from city A to city B. The return flight took 1 hour more than it took to fly to city B. The difference in flight time was due to the winds and the wind speed was 100 km/h. If there was no wind factor on the flight to city B, determine the average speed of the plane in still air. Assume the average distance between the two cities 7000 km.

➢ **DATA MANAGEMNT 12**

(A)The data below shows the scores on the Math exam of Gr 10 students.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 60 | 70 | 15 | 75 | 73 | 76 |
| 65 | 77 | 58 | 82 | 88 | 71 |
| 55 | 81 | 94 | 86 | 65 | 56 |

(i) Determine the mean and median values of math scores.

(ii) Which central tendency measures will best describe the class performance?

(iii) Determine the standard deviation

(iv) Determine the Inter-quartile range

(v) Sketch Box-and-whisker plot for the above data.

(B) A five member team is randomly chosen from four Gr 10 students, six Gr 11 students and 10 Gr. 12 students. What is the probability that the team has two Gr. 10 and three Gr 12 students.

## Answer Key : 15-2

**ADV. FUNCTIONS**

Vertical translation 3 units down.

**CHEMISTRY 1B/12**

(1) (a) Rate = k $[NO]^1 [Cl_2]^1$

(b)$3.8 \times 10^{-2}\ mol^{-1}Ls^{-1}$

(ii) $\Delta H$= -77.1kJ

(iii)$\Delta S^O$ = -121.3J

**BIOLOGY 11 & IB /12**

(A)The stroke volume (volume of blood in a single cardiac cycle) increases when the physical fitness increases. Therefore, with the lower heart rate (no cycles/ minute) heart can deliver the required amount of to tissues.

(B) During exercise body requires more supply of oxygen. This will lead to increases breathing rate and, heart rate and metabolism to speed up.

(ii) Both the 5' and 3' ends are covalently modified during the mRNA synthesis before the mRNA exits the nucleus. 5'cap – modified by addition of 7, methyl guanosine (GTP) that is added to the 5' end. The 3' end, modified by enzymatic addition of a poly-A-tail, (Poly-A tail – sequence of about 200 adenine nucleotides) to the 3' end of mRNA before it exits the nucleus.

• These modifications inhibit degradation of mRNA in the cytoplasm, may facilitate attachment to the small ribosomal subunit and may regulate protein synthesis by facilitating mRNA's export from the nucleus to the cytoplasm.

Ans. key 15-3 - next issue
☎ 647 341 3975
K.A.Srikrishnaraj PhD
ask@ keentutoringcentre.com
KEEN TUTORING CENTRE

# திரை விமர்சனம்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

உணர்கிறான். தியா மீது வக்கிர இச்சை கொண்ட டாக்டர்தான் தன்னை உருக் குலைத்தது என்றும், அவளை அவர் திருமண செய்யப்போகிறார் என்றும் அறிந்து, அவளை திருமண மண்டபத்திலிருந்து கடத்துகிறான். தன்னை உருக்குலைத்தவர் களை பழி வாங்குகிறான். தன்னை கடத்திவந்த குரூபி, லிங்கேசன்தான் என்று செல்போன் சாட்சியாக அறியும் தியா, அவனை தன்னுடன் வரச்சொல்ல, லிங்கேசன் மறுக்கிறான். அப்போது அவனிடம் தியா, 'எனக்கு இப்படி நடந்திருந்தால் நீ என்னை விட்டுவிட்டு போவாயா' என்று கேட்கிறாள். லிங்கேசன் மாட்டேன் எனச்சொல்ல, அப்போது நான் மட்டும் உன்னை விட முடியுமா என்று கேட்க லிங்கேசன் அவளுடன் செல்கிறான். உருக்குலைந்த லிங்கேசனை தன்னுடன் கூட்டிச்சென்று அவனுக்காக தான் உருவாக்கிய மலர்த் தோட்டத்து வீட்டில் வைத்து சிகிச்சையளிக்கிறாள். சிகிச்சையில் கொஞ்சம் கொஞ்சமாக பழைய வடிவை நோக்கி லிங்கேசன் திரும்ப, படம் முடிகிறது.

இப்படத்துக்கு விக்ரம் செய்திருக்கும் அசராத உழைப்பு பிரமிக்கச் செய்வது. பொடி பில்டிங்கிற்காக உடம்பை அப்படி மாற்றி, பின்பு சட்டென்று மூன்றே மாதங்களில் அரை உடலாக காட்சி தரும் அகோரமெல்லாம் நடிப்பு மீதான பக்தியின்றி வேறில்லை. 'என்னருகில் நீ இருந்தால்' பாடல் காட்சியில் வேறுவிதமான மேக்கப்புடன் அவர் தோன்றி செய்யும் நடிப்பு வித்தை ஆச்சரியமூட்டுவது. எமி ஜாக்சன் மொடலிங்கிற்கு ஏற்ற முகம். தன்னை விக்ரம் கடத்தி வந்து வைத்திருக்கும் காட்சியொன்றில் உருக்கமாக நடித்திருக்கிறார். நகைச்சுவைக் கான பொறுப்பை சந்தானம் பவர்ஸ்டார் கூட்டணி ஏற்றிருக்கிறது. சுரேஷ்கோபி, உபேன் பட்டேல், சிவாஜி ராம்குமார் ஆகிய மூன்று வில்லன்களில் உபேன்தான் உருப்படியாகத் தெரிகிறார்.

அற்புதமான காட்சிகளுடன் கண்களுக்கு விருந்தளித்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம். சீனாவில் படமாக்கப்பட்ட அனைத்துக் காட்சிகளுமே கொள்ளை அழகு. ஏ.ஆர். ரகுமான்தான் கொஞ்சம் ஏமாற்றி விட்டார். பாடல்களில் புதுமுகப் பாடகர்களில் குரல் எடுபடவில்லை. பின்னணி இசையும் ஈர்க்கவில்லை. பழைய கதைதான் என்றாலும் புதிய தொழிநுட்பங்கள், புதிய வித்தைகள் மூலம் தனித்து நிற்பார் இயக்குநர் ஷங்கர். அவ்வகையில் இப்படமும் வெற்றி படம்தான். சண்டை காட்சிகளில் இருக்கின்ற அத்தனை தொழில்நுட்ப வாய்ப்புகளையும் பயன்படுத்தி யிருக்கிறார். ஒவ்வொரு படத்திலும் வில்லன்களுக்கான தண்டனை காட்சிகளில் ரொம்பமே மெனக்கெடுவார். இதில் அவருக்குக் கை கொடுத்திருப்பது மெடிக்கல் டிக்சனரி. ஷங்கருக்கு கிராபிக்ஸ் மேல் அலாதிப் பிரியம் உண்டு. அதை படத்தை அழகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தும்வரை பிரச்சினை இல்லை. இதில் அலங்கோலமாக் கப் பயன்படுத்தியிருக் கிறார். படத்திற்கு 'ஏ' டீசர்டிபிகேட்டுதான் கொடுத்திருக்க வேண்டும் 'யுஏ' கொடுத்திருக்கிறார்கள். விக்ரமனின் முக உடல் மாற்றம், தோற்றப் பொலிவு, இவரால் நவீன கருட புராணத்தின்படி தண்டிக்கப்படும் அந்த நால்வரும் கடைசியில் இருக்கும் தோற்றம் எல்லாம் பெரியவர் களாலேயே ஜீரணிக்க முடியாதவை. குழந்தைகள் பார்ப்பது நிச்சயம் நல்லதல்ல. மட்டுமல்ல, படத்தில் ஆபாசத்தின் எல்லையைத் தொடும் பல காட்சிகளும்



உண்டு. திருநங்கை சம்பந்தப்பட்ட காட்சிகளும் கண்டிக்கவேண்டியவை. பொதுப்புத்தியில் திருநங்கைகள் பற்றிய புரிதல் மாற்றமடைந்து வரும் நிலையில் 'நகைச்சுவை' என்ற பெயரில் திருநங்கைகளை இன்னும் தமிழ் சினிமா கேலி செய்துகொண்டிருப்பது பிற்போக்குத் தனம். வருந்தத்தக்கது.



# தமிழ் மரபுரிமைத் திங்கள் விழா 2015

ஒன்றாறியோ முது தமிழர் மன்றத்தினர் தமிழர்களின் மொழி, பண்பாடு, கலைகள், வரலாறு என்பவற்றின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் தை மாதம் 19ம் திகதி முதல் 24ம் திகதி வரை ஸ்காபரோ சிவிக் சென்டர் முன் அரங்கில் ஒரு



வாரகால சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

நாதஸ்வர இசை, பாரம்பரிய நடனங்களான கரகம், கும்மி, பொம்மலாட்டம், உழவர் நடனம், பொங்கல் நடனம், வீணா கானம், தமிழிசைப்பாடல்கள் என பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நிகழ்ச்சிகளின் உச்சக்கட்டமாக மன்ற அங்கத்தவர்கள் கலந்து கொண்ட தமிழர்களது பாரம்பரியத்தின் பெருமையை வெளிக்காட்டும் இசையோடு கூடிய ஒரு நடைபவனி இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சி அனைவரது பாராட்டுக்களையும் பெற்றது.

இளம் சந்ததியினர் விளங்கிக் கொள்ளும் வகையில் சடங்குகளின் முக்கியத்துவம் குறித்து திரு. குமார் புனிதவேல் எழுதிய 'இலங்கை தமிழர்களின் வாழ்வில் சடங்குகள்' என்ற புத்தகம் நிகழ்ச்சியின் போது ஒன்றாறியோ முது தமிழர் மன்றத்தால் வெளியிடப்பட்டது. தமது பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் அறியத்துடிக்கும் அடுத்த சந்ததியினருக்கு இந்தப்புத்தகம் ஒரு சிறப்பான வழிகாட்டியாகும்.





# ஒளி படைத்த கண்களும் ஒளியிழந்த கண்களும்

‘ஆத்மாவின் சாளரம்’ (The window of the soul) என்று அழைக்கப்படும் எமது கண்கள் எமது உடலுறுப்புகளில் மிகவும் பெறுமதியும், திறனும் கொண்டவை. ஒளியுடன் கூடிய இக்கண்கள் சிறுவயதில் குண்டு குண்டாக, உருளும் வடிவில் எத்தனையோ செய்கைகளைச் செய்யும். ‘கண்ணா ஓடிவா’ என்று அழைப்பதும், ‘என் கண்மணியே’ என்று அழைப்பதும் கண்களின் பெறுமதியால் ஏற்பட்டவை. ஆண்களின் கண்கள் படிப்படியாக பிரகாசம் பெறும்போது பெண்களின் விழிகளோ அங்கும் இங்கும் அலைபாயும். மீன்கள் போல துடிக்கும். ஆண்களின் கவனத்தை ஈர்க்கும் தாமரைக்கண்கள் போலாகும். கண் எம்மை சுற்றியுள்ள எல்லா காட்சிகளையும் கமெராக்கள் போன்று எமக்குள் செலுத்தும் அபூர்வ சக்தி வாய்ந்தது. ஒரு சிலையை வடிக்கும் சிற்பி கூட கடைசியாகத்தான் கண்களை திறப்பார்கள். காரணம் ஒருவரின் முழு உண்மை தோற்றத்தினையும் கண்களே சரியாக காட்டவல்லவை.

கண் என்பது ‘கமெரா போன்று செய்யப்பட வல்லவை. முன்பகுதி ஒளி ஊடுருவக் கூடிய திசுக்களால் ஆனவை. கண் சுமார் 2.5 செ. மீற்றர் குறுக்களவு உடையது. கண்ணை உருட்டுவதற்கு அதாவது மேலும் கீழுமாகவும் பக்கவாட்டிலும் அசைப்பதற்கு ஆறு தசைகள் உதவி செய்கின்றன. எமது தோலுக்கு ஏற்றபடி கண்களில் ‘மெலனின்’ எனப்படும் நிறமி மையம் உள்ளது. கறுப்பு, நீலம், பழுப்பு, சாம்பல், வயலட் நிறங்களில் இவை காணப்படும். பெரும்பாலானவர்களுக்கு கறுப்பு விழிகளே உள்ளன. கண்களின் முகப்பு பகுதி விழி வெண்படலம் (Cornea) எனப்படும். மத்தியில் உள்ள கதிராளி (Iris) பகுதி திறந்து மூடக்கூடியது. கமெராவைப் போல வெளியே உள்ள வெளிச்சம் பியூபில் (Pupil) என்ற துவாரத்துக்கூடாக செல்லும். இதன் பிற்பகுதியில் விழிவில்லை (Lens) இருக்கிறது.

விழி வில்லையின் பிற்பகுதியில் விழித்திரை (Retina) உள்ளது. இதன் முடிவில் பார்வை நரம்புகள் optic nerve மூலம் காட்சிகள் மூளைக்கு செல்லும். கண் உருளை திரவத்தால் நிறைந்துள்ளது. மிகவும் சுத்தமான இரத்தம் மட்டுமே வந்து செல்லும். ஏனைய உறுப்புக்கள் சரியாக இயங்கினால் மட்டுமே நல்ல இரத்தம் காணப்படும். ஆனால் கண்ணின் நரம்புகளும் ஏனைய பாகங்களும் பழுதடையும்போது இரத்தமும் அசுத்தமடைகின்றது. இதுவே பல கண் நோய்களை ஏற்படுத்தி விடுகின்றது. இந்த நிலையில் கண் அழற்சி (Pinkeye), இமை வீக்கம் (Blepharitis), குருட்டுத்தன்மை (Blindess), ஒளி முனைப்பகுதி குறைபாடு (Astigmatism), நிறக்குருடு (Colour Blindness), கண்விழி விறைப்பு நோய் (Glaucoma), மாலைக்கண் (Night Blindness), விழித்திரை தளர்வு (Retinal detachment), வாக்குகண் (Squint eye) ,கண் எரிவு (Pain in the eyes), வரண்ட கண் (Dry eye), கண்ணால் நீர் வடிதல் (Watering of eye), சிவப்பு கண் (Pink eye), கிட்டப்பார்வை, தூரப்பார்வை, கண்புரை (Catract) போன்ற 200 வகையான நோய்கள் கண்களுக்கு ஏற்படும். படிப்படியான பளபளப்பான கண்கள் பழுதடைய தொடங்கும். மீன் விழி, கயல் விழி, மான் விழி என்றெல்லாம் அழைக்கப்பட்ட கண்கள் தமது செயலிழந்து காணப்படும். அரைவாசிக்கு மேற்பட்ட செய்திகளை மூளைக்கு அனுப்பி வைக்கும் கண் மட்டும் இல்லை என்றால் நாம் எப்படிப் போய் விடுவோம் என்பதனை சிந்திக்கவே முடிவதில்லை.

ஒரு நிமிடம் கண்களை மூடிப்பார்போமென்றால் உலகமே இருண்டுவிடும். ஒரு பொருளும் தெரியாது, எல்லாமே போய்விடும். சிந்தனைகள் கூட சிதறிவிடும். நயனம், நேத்திரம், விழி என்பது மட்டுமல்ல பார்வை. இலக்கு, கவனம், மையப்புள்ளி, காலதர், வட்டத்துளை, கண்ணுருளை என்றெல்லாம் பலவழிகளில் அழைக்கிறோம். பகலவன் (Eye of the day) சட்டத்தின்படி (In the eye of law) நன்றாக கண்ணீர்விடு (Cry one’s eyes out) இப்படி பல முக்கியமான வார்த்தைகளுக்கும் கண்ணின் முக்கியத்துவம் கூறப்படுகிறது. ‘அவனுக்கு சரியான கழுகுக்கண்’ என்று எம்மவர்கள் கூறுவதனை அடிக்கடி கேட்டிருப்போம். காரணம் சில பறவைகள் எந்தளவுக்கு தூரம் பார்க்கும் சக்தியுள்ளது என்பதனை புலப்படுத்துவதே இது. சில பறவைகளுக்கும், வண்ணத்துப் பூச்சிகளும் மட்டுமே நிறத்தை பார்க்கும் தன்மையுளது. பூனை, நாய் மற்றும் விலங்குகள் கறுப்பு வெள்ளையில் தான் உலகை காண்கின்றன. உலகில் உள்ள பறவைகளில் கழுகுக்கு மாத்திரமே பார்வைச் சக்தி அதிகம். வெகு தொலைவில் வான்வெளியில் பறந்து கொண்டிருக்கும்போது நிலத்திலுள்ள உணவினையோ, பொருட்களையோ நுட்பமாக அவதானிக்கும் கூர்மைக் சக்தி படைத்தது. அமெரிக்கா தனது தேசியப் பறவையாக கழுகினை பாவிப்பது இதனால் தான் என்னவோ! கழுகு வகைகளில் ஒன்றான பருந்து கோழிக்குஞ்சுகளை துல்லியமாக கண்டுபிடித்து தூக்கிச் சென்று விடுகிறது.



இவ்வாறெல்லாம் ஒளிச்சக்தியுடைய எமது கண்கள் படிப்படியாக தனது பார்வையை மாற்றிக் கொள்வதுதான் வேதனை அளிப்பதாகும். பொதுவாக 2000க்கு மேற்பட்ட நோய்கள் கண்களில் ஏற்படுவதாக மருத்துவர் கூறுகின்றனர். கண் இமைகளில் மட்டும் 94 விதமான நோய்கள் ஏற்படுகின்றன. பொதுவாக உடலாரோக்கியம் குறைவடையும் போது கண்களில் பாதிப்பு ஏற்படும். இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்கள் நேரடியாக கண்களை பாதிப்பதால் இரு விழிப்படலம், கண்வில்லை, விழித்திரை, பார்வை நரம்பு, மூளையின் பிற்பகுதி என்பன பாதிப்புறுகின்றன. முக்கியமாக விழித்திரைப்பாதிப்பு (Diabetic Retinopathy) விழித்திரைப் பொட்டு பாதிப்புறல் (Macular Degeneration), கண்புரை (Cataract), கண் அழுத்தம் அல்லது கண்விழி விறைப்பு நோய் (Glaucoma), வரட்சிக்கண் (Dry eye) போன்றவற்றை குறிப்பிடலாம்.

முதலாவதான ‘Diabetic Retinopathy’ என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் நோயானது கண்ணின் பின்புற விழித்திரையினைப் பாதிக்கின்றது. விழித்திரை கண்ணின் பின்புறமாக இருந்து நாம் பார்க்கும் எல்லாவற்றையும் விம்பமாக விழித்திரையில் விழுத்தி மூளைக்கு எடுத்துச் செல்கிறது. இது மிகவும் நுண்ணிய சவ்வு போன்றது. எப்போதும் சரியான இரத்தோட்டம் இருந்தால் மட்டுமே விழித்திரையும் பாதிப்பின்றி இயங்கமுடியும். நீரிழிவு உள்ளவர்களது இரத்தக் குழாய்கள் இலகுவில் பழுதடைந்து, அடைப்பு ஏற்படும் சாத்தியம் அதிகம். இதனால் விழித்திரையின் தொழிற்பாடு பாதிப்புறுகின்றது.

எமது பார்வை பொதுவாக இரண்டு வகைப்படும். அவையாவன மையப்பார்வை (Central vision) மற்றையது வெளி எல்லைப்பார்வை அல்லது சுற்றுப்பரிமாணப்பார்வை. மையப்பார்வை எழுத்துக்களை வாசித்து விளங்கவோ, ஒருவருடைய முகத்தைப் பார்த்து இவர்தான் என்று அடையாளம் கண்டு கொள்ளவோ உதவுவதாகும். சுற்றுப்பரிமாணப்பார்வை என்பது மையப்பார்வைக்கு வெளியே உள்ள பொருட்களின் அசைவை கண்டு பிடிக்க உதவுகிறது எனினும் முழுமையாக உணர முடிவதில்லை. இந்த நிலையில் மெல்லிய இரத்தக்குழாய்கள் சற்று இரத்த வெளியேற்றம் செய்வதால் பிரச்சினை ஏற்படுகிறது. ஆரம்பத்திலேயே பரிகாரம் செய்யப்படாது விட்டால் கண்ணின் பல பகுதிகள் பாதிப்புறும். பொருட்களை கண்டுபிடித்தல் கடினமாகும். கண்புரை, கண்அழுத்த நோய்கள் ஏற்படலாம். ஒன்று இரண்டாக தெரியும். பார்வைப்பகுதி மங்கும். கண்ணுக்குள் ஏதோ மிதப்பது போல் தெரியும். இதற்காக செய்ய வேண்டியது; நீரிழிவு நோயை கட்டுப்படுத்துதல், கண்பரிசோதனை செய்யப்படல் வேண்டும், சிலவேளைகளில் Anti VEGF என்ற ஊசிமூலமான சிகிச்சை தேவைப்படலாம். சத்திரசிகிச்சையும் உதவலாம். கண் சத்திரசிகிச்சை நிபுணர் இதில் உதவுவார்.

இரண்டாவது கண்பிரச்சினை Macula எனப்படும் விழித்திரைப் பொட்டு பாதிக்கப்படுவதாகும். 65 வயதுக்கும் மேற்பட்ட பலருக்கு age related macular degeneration எனப்படும் விழித்திரைப் பொட்டு சிதைவு நோயுள்ளவர்களுக்கு வாசித்தல், பொருளின் அடையாளத்தை கண்டு கொள்ளல் முடியாமல் போகலாம். படிகளில் ஏற சிரமப்படுவர். பெண்களுக்கு ஆண்களை விட இந்நோய்ப் பாதிப்பு அதிகம். பொதுவாக 15 வீதமான மக்கள் இந்த நோயுடன் வாழ்கின்றனர். தற்போது லேசர் மூலமான சிகிச்சைகள் உள்ளன. Argon laser surgery பிரசித்தமானது. பல்வேறு உயிர்சத்துக்கள், தாதுப்பொருட்கள் பாவித்தலும் நலம் தரும். Zinc வில்லைகள் பாவிப்போரும் உளர். இந்நோய் உள்ளவர்களும் 6 மாதங்களுக்கு ஒரு தடவை கண் பரிசோதனை செய்ய வேண்டும். ஒரு கண்ணை மூடிக் கொண்டு மற்றைய கண்ணால் பார்த்தால் சிறிய மாற்றங்களை உணரலாம். அதாவது எமது கண்பார்வைப் புலங்களை தனித்தனியே சரி பார்க்க வேண்டும். பார்வைத்தட்டு (Optic Disk) என்று அழைக்கப்படும் பார்வை நரம்பின் அடிப்பகுதி வீக்கம் அடைதல் மற்றும் பார்வை நரம்புக்கு இரத்தோட்டம் இல்லாமற் போதல் போன்றன கண்ணின் முழுப்பார்வை புலத்திற்கும் குருட்டுத்தன்மையை ஏற்படுத்தவல்லன. எல்லாவற்றிற்குமாக குழுக்கோஸினை குறைவாக வைத்துக் கொள்ள வேண்டும்.

கண்ணில் ஏற்படும் மிகவும் கடுமையான மாற்றுவதற்கு சிரமான நோய் கண்அழுத்தம் எனப்படும் கிளாக்கோமா (glaucoma) என்பதாகும். பார்வை நரம்புகளை வெகுவாக பாதிக்கும் இந்நோய் கண்ணில் உள்ள திரவ அழுத்தம் காரணமாகவே ஏற்படுகிறது. முன்பகுதி கண்ணில் தெளிந்த aqueous என்னும் திரவம் முழுக் கண்களுக்கும் சென்று வரக்கூடியது. மேலதிகமாக இத்திரவம் சுரந்தாலோ அல்லது தடைப்பட்டாலோ இந்நோய் வரலாம். இதனை



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

# காதல் பலவகையாகும்




கண்டதும் காதல், கல்லூரிக் காதல், காரியாலயக் காதல், இளமைக் காதல், இல்லறக் காதல், உறவினர் காதல், முதுமைக் காதல், ஒரு தலைக்காதல், ஓரினக்காதல், தெய்வீக் காதல் என்பனவே அவையாம். மேற்குலகில் பரவியுள்ள புதுவித புதிரான காதல் ஓரினக் காதலாகும். இது குலவி மகிழவா, குலம் விளங்கவா காதல். என்பதனை கேள்விக் குறியாக்கியுள்ளது.



காட்சி, வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம் செய்பல், நானும் வரையிறத்தல், நோக்குவது எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்று இச்சிறப்புடை மரபினவை களவு என மொழிப. காதல் தோன்றுதற்கு பத்து செயல்கள் காரணமாகின்றன என்று தொல்காப்பியர் மேலே உள்ள பாடலில் தெரிவித்துள்ளார். அவையாவன காட்சி என்பது ஒருவரை பார்க்க முற்படுவது. வேட்கை என்பது மீண்டும், மீண்டும் பார்க்க விருப்பப்படுவது. ஒருதலை உள்ளுதல் என்பது ஐயப்படுவது. அதாவது தான் மட்டும் நினைக்கிறோமா? அவர் நினைக்கவில்லையா? பார்க்க விரும்பவில்லையா? என ஐயப்பட்டு தனக்குத் தானே பேசிக் கொள்ளுதல். மெலிதல் என்பது அவரையே நினைந்து சரியாக உண்ணாமல், உறங்காமல் உடலை கெடுத்துக் கொண்டு மெலிந்து போதல். ஆக்கம் செப்பல் என்பது தன் காதலை ஏதேனும் ஒருவழியில் அவருக்குக் கூற முற்படுவது, நானும் வரையிறத்தல் என்பது அவர் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால் நாணத்தை மறந்து அவரிடமே சென்று தன் காதலை வெளிப்படையாகக் கூறுவது. நோக்குவது எல்லாம் அவையே போறல் என்பது காதலை அவர் ஏற்றுக்கொண்டு விட்டால் பார்க்கும் பொருளிலெல்லாம் அவரைக் காணுதல், கேட்கும் சொல் எல்லாம் அவராகவே நினைத்தல், அனைத்தும் அவராகவே எண்ணல்.

மறத்தல் என்பது இந்த உறவுநிலை உற்றார்க்கும் ஊரவர்க்கும் தெரிந்துவிட்ட பின்னர் திருமணத்திற்கு அவர் மறந்துவிட்டால் தன்னைத்தானே துன்புறுத்திக்கொண்டு அவரை மறக்க முயலுதல். மயக்கம் என்பது அவரை மறக்க முடியாத நிலையில் தன்னை மறந்த நிலையில், கனவிலும் அவர் பெயரைக் கூறிப்பிதற்றுவது. சாக்காடு என்பது திருமணத்திற்கு இசைவு கிடைக்காது என்று தெளிவாக தெரிந்த பின்பு தன்னை அழித்துக்கொள்ளவது.

காதலுக்காக முடிதுறந்த மன்னரும் உண்டு. கொலை செய்யப்பட்ட இளவரசியும் உண்டு. பெற்றோரை, உற்றாரை பிரிந்து சென்ற பிள்ளைகளும் உண்டு. தற்கொலை செய்து கொண்ட சாமான்யர்களும் உண்டு.

ஒருபொழுதேனும் உன்னுடன் நான்
உயிராய் இணைந்திருப்பேன்
இறப்பினும் மறுபிறப்பினும்
என்றும் நினைத்திருப்பேன்

என்று பாடும் காதலன் நினைவுச் சின்னம் ஒன்றை நிச்சயமாக நிறுவுவான். தாஜ்மகால் காதலுக்கு ஒரு மாளிகை.



நா. க. சிவராமலிங்கம்

# ஒளி படைத்த...

மாற்றுவது கடினம் என்பதால் கண் குருடாக நேரிடலாம். இதில் இரண்டு வகை உண்டு. ஒன்று திறந்த கோண கண் அழுத்தம் (Open Angel Glaucoma). கோணம் மூடிய கண் அழுத்தம் (Angle Closure Glaucoma) என்பதாகும். கண் திடீரென்று திரவம் கூடினால் கண் அழுத்தம் கூடலாம். இதனால் கண்குருடாக நேரிடலாம். திறந்த முறையில் படிப்படியாக பார்வை குறையலாம். பொதுவாக மங்கலான பார்வை, கடுமையான நோ, சிவப்பு நிறம், குமட்டல், சத்தி எடுத்தல் ஏற்படும். சிலருக்கு கண்கள் பெரிதாகும். ஒளிக்கு கண் கூசும். பார்வை பிரச்சினை ஏற்பட்டவுடன் கண்பரிசோதனை செய்தல் நலம். கண் அழுத்தம் அளக்கப்படும். எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதும் அறியப்படும். Gonioscope என்னும் விசேட கண்ணாடி பொருத்தப்பட்டு திரவ சுற்றுகை அறியப்படும். லேசர் முறையிலும் பார்வை நரம்பு இழப்பு அறியப்படலாம். நோக்கம் கண் அழுத்தத்தினை குறைப்பதாகும். மூடிய கண் அழுத்தம் மிகவும் கடுமையானதாகும். தற்போது கண் திரவ மருந்துகள் பாவிக்கப்படலாம். தற்போதுள்ள புதிய வழிமுறைகளால் இந்நோயின் பாதிப்பை குறைக்கலாம். எனினும் பார்வை இழந்தால் இழந்தது தான். இனிமேல் இழக்கப்போவதனையே தீர்க்க முயல வேண்டும். அடிக்கடி கண்பரிசோதனை செய்வது தான் ஒரே வழியாகும்.

எம்மில் பலருக்கு கண்ணை பரிசோதனை செய்வது எப்படி என தெரிவதில்லை. கண்ணை பரிசோதிப்பவர்கள் எல்லோரும் வைத்தியர்களல்ல. கண்ணை பரிசோதிப்பதில் இரண்டு வகை நிபுணர்கள் உளர். முதலாவது நிபுணர் ஒப்தல்மோலஜிஸ்ட் (Ophthalmologist) என அழைக்கப் படுவார்கள். இவர்கள் கண் துறையில் சிறப்பு பயிற்சி பெற்றவர்கள். சத்திர சிகிச்சை செய்யக்கூடியவர்கள். இரண்டாவது பிரிவினர் ஒப்ரோமெற்றிஸ்ட் (Optometrist) ஆவர். இவர்கள் பார்வை சோதனை நுட்பர்கள். இவர்கள் கண்களில் ஆரம்பிக்கும் நோய்கள் பற்றிய அறிவுள்ளவர்கள் சத்திரசிகிச்சை செய்பவர்களல்ல.



கடுமையான மருந்துகளையோ, நீரிழிவு காரணமான பார்வை பிரச்சினைக்கோ தீர்ப்பளிப்பவர்கள் இவர்களல்ல. நீரிழிவு உள்ளவர்கள் விசேட கண் மருத்துவரை (Ophthalmologist) வருடம் ஒருமுறை சென்று பார்க்க வேண்டும். தற்போது கண்ணாடிக்கடைகளில் கண்ணாடிகளை மட்டும் வழங்குபவர்கள் Optician எனப்படுவர். எனவே சரியான இடத்தில் கண்பரிசோதனை செய்வது அவசியம். லேசர் ஒளிக்கதிர்கள் பாரிய பிரச்சினைகளை தீர்க்க உதவுகின்றன. நுண்ணிய இரத்தகுழாய்கள் சிலவேளை களில் வெடிப்புறலாம். இவை தோன்றி குறுகிய காலத்திலேயே விழித்திரையில் இரத்தக்கசிவு ஏற்படலாம். லேசர் கதிர்களை பாவித்தாலும் எமது சுற்றும் பரிமாணப் பார்வை பாதிக்கப்பட்டாலும் எமது மையப்பார்வை தொடர்ந்தும் இருக்கும். சில வைத்தியர்கள் கண்ணில் ஊசியின் மூலமாக கண்விழித்திரைப் பொட்டின் பாதிப்பினை குறைக்க முயற்சி செய்கின்றனர். மாதம் ஒரு தடவை இவ் ஊசி ஏற்றப்படுகிறது. மருந்தின் விலையும் அதிகம். OHIP இதனை வழங்காது. சொந்த செலவிலேயே செய்ய வேண்டும். ஆயிரக்கணக்கில் செலவாக-லாம்.

எந்த நோயாளியையும் முதலில் கண் மடலை இழுத்துப் பார்ப்பது வைத்தியர்களின் முதல்வேலை. அதிலும் நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு முக்கியமான பாதிப்புக்கள் முதலில் கண்களிலேயே தோன்றும். பார்த்தால் சிறிய உருவம் தான், குறுகுறு அங்கும், இங்கும் ஓடும்கண்கள் தான். ஆனால் இதற்கு வரும் நோய்களோ நூற்றுக்கணக்கில். கண்ணின் பார்வை மட்டுமல்ல சுற்றியுள்ள இமை, கண்தசை, கண்மடல் போன்ற பகுதிகளிலும் கூட பல நோய்கள் வருகின்றன. எமது ஜன்னலாக விளங்கும் கண்களை பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியமானதொன்று.

இன்று மிகவும் முக்கியமான ஆய்வுகள் கண்விழி விறைப்பு நோய் (Glaucoma), விழித்திரைப்பொட்டு சிதை (macular degeneration), விழித்திரைப்பாதிப்பு (retionpathy), கண்புரை (cataract) போன்ற நோய்களே உலகில் பலருக்கும் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. இந்தியா போன்ற வறுமையுள்ள நாடுகளில் ஆயிரக்கணக்கில் கண்களை இழக்கும் மக்கள் உளர். நிறுத்தவோ மாற்றவோ முடியாத புதுப்புது நோய்களால் பலர் தவிக்கின்றனர். மிகவும் சிக்கலானதும், பக்க விளைவுகளை ஏற்படுத்துவமான நோய்களின் தீர்வு எமது கைகளிலேயே உள்ளது. நோய் வருவதற்கு முன்பு தடுப்பதே எமது கடமையாகும்.

நகைச்சுவைத் தொடர் 302

# ராசம்மா ராச்சியம்



ராசா என்பார் மந்திரியென்பார் ராச்சியமில்லை ஆள.. என்பதுபோல புதிய ஜனாதிபதி மைத்திரிபால செனநாயக்கா பதவியேற்பும் பதவி இழந்த ஜனாதிபதி ராஜபக்ச பற்றியும் தினம் தினம் அதிர்ச்சித் தகவல்கள் வந்துகொண்டேயிருக்கின்றன…



உலகண்ணை நான் முந்தியே சொன்னனான் என.. தொடங்கினா ஆட்டிலறி அன்னம்மா மலிந்தால் சந்தைக்கு வரும்.

ஐ.நா. சபையினர், கல்லில் நார் உரிப்பது போல போர்க்குற்றங்களை அறிய முயன்றனர். ஆனால் இப்போது அதிகாரம், அடக்கு முறையிலிருந்த பல செய்திகள் தாமாகவே அம்பலத்துக்கு வருகின்றன.



ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பினம் என சொல்லிச் சிரிச்சா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

ஆபிரிக்காவில் தங்கச்சுரங்கம், அலரி மாளிகையில் சுரண்டிய தங்கம். யு நோ..மிஸிஸ் ராஜபக்ச என ஐ பொட் அகிலாண்டேஸ்வரி தொடங்க அவவின்ரை பேர்….சிராந்தி ராஜபக்ச என டபக்கென்று சொன்னா செக்கண்ட் புளோர் செல்லம்மா.



ஓம் அவ நூறு கிலோ தங்கத்தை களவெடுத்தவவாம். கடவுளே! என்று பெருமூச்சு விட்டா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி. உலகர் மெதுவாக நோட்டமிட்டார். ஒவ்வொருவரும் பனியோ மழையோ பிடித்தால் கறுக்கக்கூடிய கிலிற் கவறிங் சங்கிலிதான் போட்டிருந்தனர். றோட்டு, வழியெல்லாம் சங்கிலிக் கள்ளர். அதாலைதான் நாங்கள் பவுண் நகை போடுறேல்லை என செக்கண்ட் புளொர் செல்லம்மா சொல்லிக் கொள்ளுவா.



அதுசரி நூறு கிலோ பவுண் பதுக்கி வைச்சா சொத்துக்குவிப்பு வழக்கிலை எத்தினை வருசம் தீருமென ஐ பொட் அகிலாண்டேஸ்வரி கேட்க,
ஒரு கிலோவுக்கு ஒரு வருசமாம். ஆனால் ஜெயிலில் கம்பி இரும்புதானாம். முந்தி அலரி மாளிகையிலை இருந்தவை எல்லாரையும் ஜெயில்லை போடுறதெண்டா இடம் காணாது என ஆட்டிலறி அன்னம்மா சொல்ல…



நோ புறப்பிளம். தேவையில்லாமல் பிடிச்சு அடைச்சு வைச்சாக்களிலை புனித பாப்பரசர் இலங்கைக்கு விசிற் பண்ணேக்கை 1000 பேரை விடுதலை செய்தவை. இன்னும் கனபேரை விடப்போயினம். அப்ப வெலிக்கடை, போகம்பரை, பூசா, ஊர்காவற்துறை, கடல்கோட்டை ஜெயில் எல்லாம் சும்மாதானே இருக்கப்போகுது. அரசியல் கொலை, வெள்ளைவான் கடத்தல், கொலை, பணம் பதுக்கல், தங்கம் கையாடல்… எல்லாரையும் பிறிச்சு பிறிச்சு அடைக்கலாம் என விளக்கம் கொடுத்தா ஐ போட் அகிலாண்டேஸ்வரி.



முடி சார்ந்த மன்னரும்…………..
என இழுத்தா…செக்கண்ட் புளோர் செல்லம்மா. சவூதி அரேபிய மன்னன் தனது 90 ஆவது வயதில் காலமாகியுள்ளார். ரி.வி.யில் அவரது வாழ்க்கைச் சரிதம் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.
…ம் …… நீங்க நல்லாயிருக்கோணும் நாடு முன்னேற

ரொரன்ரோவில் ரி.ரி.சி.இல் 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு இலவச பிரயாணம். நல்ல திட்டம் என உலகர் சொல்ல அதுசரி உலகண்ணை மாணவர்களே நாட்டின் முதுகெலும்பு என அடிக்கடி மேடைகளில் பேசுவார்கள், எத்தனை பேர் சிறுவர்களுக்காக சேர்த்த நிதியை (பணத்தை) கையாடுகிறார்கள், மோசடி செய்கிறார்கள். பொது சேவையில் உள்ளவர்கள் நல்லதையே செய்யப் பழகவேணும். இல்லாட்டி கண்டநிண்டபடி சொத்துச்சேர்த்தவை பதவியுமில்லாமல் மனைவியுமில்லாமல் இருக்கினம் என முணுமுணுத்தா ஆட்டிலறி அன்னம்மா.

என்னதான் நாம் படித்தாலும் சரித்திரங்களும் சம்பவங்களும் மக்கள் மனதை விட்டகலவில்லை. உலகருக்கு அவரின் தமிழ் ஆசிரியர் கிருஸ்ணபிள்ளை மாஸ்ரர் கண்முன்னே வந்தார். அவர் பாடம் நடத்தும் முறையே வித்தியாசமானது. பாரதமோ, ராமாயணமோ.. பாத்திரங்களை கண்முன்னே நிறுத்துவார். அவர் படிப்பித்த கலிங்கத்துப்போர் உலகரின் மனதில் எழுந்து நின்றது.
இந்தியாவில் - கலிங்கம் (இன்றைய ஒரிசா மாகாணம்)
கலிங்கநாட்டு மன்னன் அசோகச் சர்க்கரவர்த்தி போரில்
100,000 பேரை சிறைப்பிடித்தான்.
150,000 பேரைக் கொன்று குவித்தான்.




அன்று நடந்த போரிலேயே சிறைப்பிடிக்கப்பட்டவர்களும் கொல்லப்பட்டவர்களும் கணக்கிடப்பட்டனர். ஆனால் இன்று…?

"என்னதான் நடக்கும் நடக்கட்டுமே… இருட்டினில் நீதி மறையட்டுமே… தன்னாலே வெளிவரும் தயங்காதே" பாட்டு ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

உண்மையை எழுதுங்கள். உண்மையாய் எழுதுங்கள்.
உலகரின் மனம் முணுமுணுத்தது.



கடந்தவாரம் இந்திய குடியரசு தின விழாவில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மனைவியுடன் கலந்து கொண்ட நிகழ்ச்சி ரி.வி.யில் ஒளிபரப்பானது. ராசம்மா..ரூபி..ரூபன் அதனைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தனர்.




இதேவேளையில் ஐ பொட் அகிலாண்டேஸ்வரி தனது ஐ பொட்டில் தமிழ் கலண்டரைப் பார்த்து வாசித்துக்கொண்டிருந்தா. நாளைக்கு தைப்பூசம். முருகனுக்கு விசேசமான நாள். அடுத்த நாள் பௌர்ணமி. இரண்டு கிழமையாலை லோங் வீக்கெண்ட். ஃபமிலி டே, சிவராத்திரி என வாசிக்க, செக்கண்ட்புளோர் செல்லம்மா மனதுக்குள் சிரித்துக்கொண்டா. முந்தி ஐ டோன்ன் பிலீவ் கல்சர், றிலீஜன்.
எனக்கு சமயம், கலை கலாச்சாரத்தில் நம்பிக்கை இல்லையென்ற ஐபொட் அகிலாண்டேஸ்வரி…இஇ இப்போ உலகர் குழாமுடன் கோயில் திருவிழா, கலை கலாச்சார விழாவென திரிவது மற்றைய நண்பர்களுக்கு அந்தத்தினங்களை ஞாபகப்படுத்துவது செக்கண்ட்புளோர் செல்லம்மாவால் நம்பவே முடியவில்லை.



பெப்ரவரி 1….15.



02. தைப்பூசம்

03. 'அறிஞர் அண்ணா' - சி.என். அண்ணாத்துரை நினைவு தினம். தமிழகத்தின் 6 ஆவது முதலமைச்சர் (1909…1969)



04. ஆங்கிலேய ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்தது. (சுதந்திரம் எங்கே என மக்கள் இன்றுவரை கேட்டுக்கொண்டிருக்கிறனர்)

07. இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் களனி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

09. சட்டமேதை ஜி.ஜி. பொன்னம்பலம் நினைவுதினம். (1901-1977)




11. அடங்காத்தமிழன் சி. சுந்தரலிங்கம் நினைவுதினம்.

13. சர்வதேச வானொலி நாள்.

14. காதலர் தினம். (வலன்ரைன் டே)

15. மாசி மகம். (ஆலயங்களில் பால்குட அபிசேகம்) பொர்ணமி தினம்.



14. காதலர் தினம். (valentine`s day)


## வேலை வாய்ப்பு

**ரொரொன்ரோவில் இயங்கிவரும் பத்திரிகையில் முழுநேரமாக தொழில் புரிவதற்கு தகுந்தவர் தேவைப்படுகின்றது. தமிழ், ஆங்கிலம் தட்டச்சு தெரிந்தவர், தமிழ், ஆங்கிலம் பேசக்கூடியவர் கீழுள்ள email இற்கு தங்களது சுயவிபரப் படிவத்தை (Resume) ஐ அனுப்பி வைக்கலாம். நேர்முக சந்திப்பிற்கு தெரிவு செய்பவர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள் என்பதனையும் தெரியப்படுத்துகின்றோம்.**

***email: vlambaram@sympatico.ca***

## COMMERCIAL UNITS FOR SALE

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**Pl. call: 416.315.9397**

The fastest and easiest way to **bring your family together**

With the **Parent and Grandparent Super Visa**, family members from overseas can visit Canada for up to two years at a time.



La façon la plus rapide et la plus facile de **réunir les familles**

Avec le **super visa pour parents et grands-parents**, vos proches qui vivent à l'étranger peuvent séjourner au Canada jusqu'à deux ans à la fois.

**Canada.ca/supervisa**

Citizenship and Immigration Canada
Citoyenneté et Immigration Canada

Canada

வாகன விபத்து MOTOR VEHICLE ACCIDENT

SKT PARALEGAL SERVICE

CRIMINAL MATTERS
SUMMARY

416.803.5296

Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்

SK THEESAN

TRAFFIC TICKETS


LICENSED PARALEGAL sktheesan@gmail.com

MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY

TRAFFIC TICKETS
DON'T MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS

CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE

"Let me help you make the right choice"

SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393


BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL
Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!™


"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All Stars Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Chairman's Club Award
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit கவலை வேண்டாம்


அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com


THE TRUSTED MORTGAGE AGENT
"Solution For Every Mortgage"
Mortgage Alliance
The Guardian
*Some Terms & Conditions May Apply
•I will arrange your 1st Mortgage with 0% down.
•Need a 2nd Mortgage???
"When banks say no We say yes"
@ interest rate starting from 6.99%+.
Surren Selvanayagam
(LIC: M14001034)
சுரேன் செல்வநாயகம்
Contact: 647.308.3090 / E-Mail: surren12@gmail.com


Free Real Estate Class - Call: 416.321.6969


INCOME TAX
• Personal • Corporate Returns
• Small Business • GST/HST Filing
Karuna Suren B.B.A (Hons), CGA, CPA
Cell: 647-200-9307 • Bus: 416-609-3938
Email: karuna.suren@gmail.com


RealEstate / Commercial Investments


DUFFERIN & LANGSTAFF
Truck Repair
BUILDING, BUSINESS + EQUIPMENTS
Price: $1.3 Million


DOWNTOWN
Property + Business
Asking price: $4.6 million


MARKHAM & STEELES
Bedroom : 4 + 1
Washroom: 4
Price : $729,990


STOUFFVILLE
Bedroom : 4
Washroom: 4
Price : $ 650,00



MARKHAM & NASHDNE
KNIT WEAR
BUSINESS + FOUR UNITS
Asking price: 750,000


BRIMLEY & ELLESMERE
1Bedroom : 2
Washroom: 1
Price : $ 229,00

RE/MAX Dynasty Realty Inc.
Real Estate Brokerage
A. Anton Jeeva B.Eng
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage can be arranged from 2.4%
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இலவச ஆலோசனை வழங்கப்படும்

சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.
இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796
வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician I.G.Ayurvedic Medical Services (SriLanka)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED